www.tamilarangam.net

# தமிழ் முரசு

அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம்

தை - 1987 முரசு: 5 ஒலி: 3

4, 22 44, 16, 18, 19. 35




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு

தமிழ் முரசு-63

## வாழ்வதற்கான போராட்டம்.

நமது மண்ணின் நெருக்கடிகளும், ஆறுதல்களும் சிவக்கும்போது அது விடிவாயிருக்கும் என எண்ணினோம். நமது தேசத்திலோ அது இருளாயிருக்கிறது. இரு பாசிஸ்டுக்கு மாத்திரமே தெரிந்த சுலபமான வழிமுறையில் எமது போராட்டத்தின் கறைபடிந்த அத்தியாயம் மீண்டுமொருமுறை எழுதப்படும் அவலம். இதுவரை காலமும் எழுத்துருவில் படித்த பொல்பொட்டின் கொடுமைகளை இப்போது நேரிலேயே காணவேண்டிய துன்பநிலை. மனம் தகிக்கிறது; தவிக்கிறது. எமது மக்களின் உழைப்பை, வலியை, போராட்டத்தை, சிந்திய இரத்தத்தை கூக்குரலாய் தொடுக்க வேண்டிய அவசியம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இது வெறுமனே நாம் சார்ந்துள்ள இயக்கத்துக்கெதிராக புலிகள் வன்முறையைக் கட்டவிழ்த்து விடுகிறார்களே என்ற தொனிப்பில் கொட்டிய வார்த்தைகளல்ல. எமது பாசறைத் தேசத்தில் எங்கள் மண்ணின் மைந்தர்களாலேயே நிகழ்த்தப்படும் அக்கிரமங்களைப் பாருங்கள்... இதன் பின்னணிகளைக் கண்டறியுங்கள்.... பாசிசத் தலைமைகளைத் தகர்த்தெறியுங்கள்... என்று விழிக்கத் தொடங்கிவிட்ட மக்களுக்கு நாம் விடுக்கும் அறைகூவல்.

இயக்க சார்பெதுவுமின்றி சுதந்திரத்துக்காகவும், மனிதத்துவத்திற்காகவும் குரலெழுப்பிய மக்களுக்கு... அடக்கு முறைக்கும், அராஜகத்துக்கும் எதிராகக் குரல் எழுப்பிய மக்களுக்கு... ... புலிகள் — சுதந்திரப் போராட்ட வீரர்கள் தாமே என தமக்குத் தாமே இலக்கமிட்டுக் கொண்டவர்கள் வழங்கிய தண்டனை போராட்ட உரிமை மறுப்பு, சுதந்திரத்தின் குரல்வளை நசிப்பு, அபராதம், கைது, கடத்தல், சித்திரவதை, படுகொலை. ஆம்! மக்களே! பதவி மோகம் பாசிசத்தின் பாதைகளை நம்மவரிடையேயும் படரவிட்டுவிட்டது. எங்கள் பூமி புலிகளின் இரத்த வெறியாட்டத்தால் மீண்டுமொருமுறை கறைபட்டுவிட்டது.

வானம், பூமி, மனிதன், அன்பு, வாழ்க்கை, தத்துவம், நடைமுறை, சந்தோஷம், துயரம் அனைத்தையும் ஒரே நேர்கோட்டில் சந்திக்கும் மகோந்நிலையை நோக்கி நகர்ந்து செல்லும்.... இன்னும் எட்டாத அந்த தொலைதூரம் நோக்கி... அந்த சின்ன,.. சிவப்பு வெளிச்ச உலகம் நோக்கிப் போகிற ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் இந்தப் புதிய பாசிஸ்டுகளின் அக்கிரமங்கள் கண்டு அதிர்ச்சியடையவில்லை. மானுட விடுதலையும், உலகம் தழுவிய அனைத்தும் எமது அக்கறைகள். நான் என்கிற தனி மனித அகந்தையும், நாங்கள் என்கிற ஒருமைப்பான்மையையும் கடந்து நாம் எனும் விடுதலைப் புள்ளி நோக்கி நகரும் பயணமே எமது பயணம். எங்கள் பயணத்தைத் தடுப்பதற்கு அதிகார முன்னாயத்தங்களும், தமது உடனடி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவசியப்பட்ட மாற்றாக அராஜகத்தைப் பிரயோகிப்பார்கள். அதை நாம் இதுகண்டு கலங்கிவிட வேண்டாம் மக்களே. உலகில் எங்குமே மக்கள் எழுச்சியை அராஜகம் முறியடித்ததாக வரலாறு கிடையாது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அராஜகம் என்பது புலிகளின் பொது மொழியானல் எமது மக்கள் புது மொழியில் பாடம் கற்பிப்பார்கள்

ஈழப்போராட்டத்தில் மீண்டுமொரு கறைபடிந்த அத்தியாயம் விடுதலைப் புலிகளின் பாசிசத் தலைமையால் எழுதப்பட்டிருக்கிறது. இம்முறை புலிகள் ஈழமக்களுக்கெதிராகவும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கெதிராகவும் தமது அராஜகத்தை அரங்கேற்றியிருக்கிறார்கள். இந்த புதிய புலி இராணுவச்சர்வாதிகாரிகளின் அடக்குமுறை அராஜகங்களின் காரணங்களை ஆராயவேண்டிய அவசியம் எமக்கு நிறையவே இருக்கிறது.

முதலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு எதிராக புலிகள் மேற்கொண்ட அராஜகத்துக்கான காரணங்களை ஆராய்வோம். இந்த ஆராய்வின்அர்த்தம் ஈழத்தின் பல பிரதேசங்கள் யார் கட்டுப்பாட்டுக்குள் இருக்கிறதென்பதையோ அன்றி ஈ.பி.ஆர்.எல்.எவ் பெற்ற வெற்றிகளையும் புலிகள் அடைந்த தோல்விகளையும் ஆய்வு செய்வதோ அல்ல. புலிகளுக்கும் ஈ.பி-ஆர் எல்.எவ்க்கு மிடையேயான முரண்பாடுகளின் காரணம் என்ன? புலிகளின் இன்றைய அடக்குமுறை சாம்ராச்சியத்தின் பின்னணி என்ன...? பிற்பலம் யார்? என்பவற்றை ஆராய்வதே எமது நோக்கமாகும்.

உண்மையிலே ஈ.பி.ஆர்.எல்.எவ் மீது புலிகள் நடத்த முயன்ற அழிப்பு நடவடிக்கைகளின் காரணம் தனிநபர் போட்டியோ அன்றி இயக்க ரீதியான பொருமையுணர்வோ அல்லது குரோதமனவுணர்வோ அல்ல. இது இரு இயக்கங்களுக்குமிடையிலான அடிப்படையான சித்தாந்தத்தில், குணும்சத்தில், அமைப்புமுறையில் உள்ள முரண்பாடுகளின் வெளிப்பாடு. இந்த அடிப்



படை முரண்பாட்டை தமது வழமையான வெறித்தனமானமுறையில் புலிகள் வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இரு இயக்கங்களினதும் கட்டமைப்புக்களையும், குணும்சங்களையும் ஆராயும்போது எமக்கு பல விடயங்கள் தெளிவாகிறது. EPRLF தனது அணைத்துப் போராட்ட முன்னெடுப்புக்களினதும் மையக்கருவாக மக்களைக் கொள்கிறது. மக்கள்தான் மகத்தான சக்திகள் என்பதை தீர்க்கமாகவே ஏற்றுக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் தன்னை மக்கள் அமைப்புக்கள் மூலம் பலப்படுத்திக்கொள்ளுகிறது. பல்வேறுபட்ட பிரிவு மக்களின் குணும்சத்துக்கேற்றவகையில் தனது மக்கள் அமைப்புக்களை வகுத்து அதன்மூலம் மக்களை அணைத்து இறுதியில் போராட்ட நீரோட்டத்தோடு EPRLF இணைக்கிறது. ஆனல் புலிகளின் முறையோ முற்றிலும் வேறுபட்டது. மக்கள்....மக்கள் என்று புலிகள் வாய் நிறையக் கூறிக்கொண்டாலும் புலிகளின் எந்தப் போராட்ட முன்னெடுப்புமே மக்கள் சார்ந்தது அல்ல. ஒட்டுமொத்தமாக இராணுவத்தன்மை வாய்ந்தது. இராணுவசூரத்தனங்கள் மூலம் மத்தியதரவர்க்கத்தைக் கவரல்... அவர்களின் கண்களைக் கனவுகளில் மிதக்கவிட்டு விட்டு தங்களை அதிவல்லவர்களாகக் காட்டிக்கொள்ளல் - இதுதான் புலிகளின்முறை. மக்களைவிட ஆயுதங்களே உயர்ந்தவை என்பதுதான் புலிகளின் கருத்து. மக்கள் எழுச்சி என்பதில் சிறிதுமே நம்பிக்கையற்ற புலிகளின் தலைமை ஜெயவர்த்தனவைப் போலவே இராணுவத்தீர்வை மட்டும் நாடுவது. 'மக்களே கிளர்ந்தெழுங்கள் வீதிக்கு வாருங்கள், சுதந்திரத்துக்கும் சுபீட்சத்துக்குமான ஈழப்போராட்டத்தை உங்கள் கரங்களிலெடுங்கள்' என்று EPRLF மக்களை வேண்ட புலிகளோ 'மக்களே நீங்கள் வீட்டிலிருங்கள் எங்கள் வீரர்கள் போராடுவார்கள் நீங்கள் எங்களுக்குத் தேவையான நிதியைத்தாருங்கள் நாங்கள் உங்களுக்குத் தமிழீ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ழத்தை எடுத்துத்தருகிறோம்' என்று கூறுகிறார்கள்.

"தேசவிடுதலைப் போராட்டத்தையும் வர்க்கப் போராட்டத்தையும் இணைத்தே எமது போராட்ட முன்னெடுப்புக்கள் அமையும். மார்க்சிஸம் எமது அடிப்படைத்தத்துவம். பொதுவுடமை எமது இலட்சியம்" என்று உறுதியாக EPRLF கூறுவதுடன் மாத்திரம் நின்று விடாது தனது அரசியல் திட்டத்தையும், வேலைத்திட்டத்தையும் பகிரங்கமாகவே மக்களுக்கு அறிவித்திருக்கிறது. ஆனால் தாமே முதற்தோன்றியதாக முழக்கமிடும் புலிகளுக்கு இதுவரைகாலமும் ஒரு அரசியல் திட்டம் கிடையாது, வேலைத்திட்டம் கிடையாது. வர்க்கப்போராட்டம் குறித்து பூச்சிய நிலை. திட்டமெதுவும் கிடையாத தேசவிடுதலைப் போராட்டம் பற்றி அதிரடிப் பேச்சுக்கள் எழுத்திலே மார்க்சிசம் பற்றி அளந்துகொண்டு மார்க்சிசத்துக்கு எதிரான நடைமுறை. பொதுமையை நிராகரித்து தனியுடமையை வளர்க்கும் செயன்முறை.

உட்கட்சி ஜனநாயகம், மத்தியகுழு அமைப்பு முறை, விமர்சனம் சுயவிமர்சனம் எனும் நடைமுறை, பிராந்திய அமைப்புக்கள் மூலம் நிர்வாகப் பரவலாக்கல் என்றெல்லாம் EPRLF தனது பாதையை செழுமைப்படுத்திக் கொள்ள.:. தனிநபர் தலைமை, தலைமைவழிபாடு, விமர்சன சுதந்திரம் மறுக்கப்படல்....சர்வாதிகாரத்தனம், ஒரு கட்சி ஆட்சிமுறைப்பிரகடனம் என்று புலி இயக்கம் பாசிசப் படுகுழியில் விழுந்திருக்கிறது. போராட்டத்தை வென்றெடுப்பதற்கு ஜனநாயக முற்போக்குச் சக்திகள் இணைந்த ஒரு ஐக்கிய முன்னணி அவசியம் என EPRLF நினைக்கிறது. ஆனால் புலிகளோ தாமே தனித்து போராட்டத்தில் நிற்க வேண்டும் என்கிறார்கள். தேசவிடுதலைக்காகப் போராடும் இதர அமைப்புக்களுடன் கைகோர்க்க வேண்டும் என



EPRLF பிரகடனம் செய்ய, தாம் தவிர்ந்த போராட்டத்தில் உள்ள இதர அமைப்புக்கள் அழிக்கப்பட வேண்டும் என புலிகள் பிணக்குழி கிண்டுகிறார்கள்.

ஈழத்திற்குள்ளே அரசபயங்கரவாதத்திற்கு மட்டுமன்றி இயக்க அராஜகங்களிற்கு எதிரான மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு EPRLF ஆதரவு வழங்க புலிகளோ தமது காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகள் மூலம் மக்கள் எழுச்சியைத்தடை செய்கிறார்கள். ஈழத்துக்கு வெளியே ஈழமக்களின் நிலையை.. போராட்ட நியாயத்தை, அரசபயங்கரவாதத்தை தெளிவுபடுத்த சிங்கள மக்களுக்கு EPRLF அறிக்கைகள் விட புலிகளோ சிறிலங்கா இராணுவத்துக்கு பிரசுரம் அடிக்கிறார்கள். சிறீலங்காவிலுள்ள முற்போக்குச் சக்திகளுடன் EPRLF உறவுகொண்டு பொது எதிரியான ஜெயவர்த்தனா அரசைப் பலவீனப்படுத்த முனைகையிலே, புலிகளோ கொலைபாதக இராணுவத்துடன் கைகுலுக்கி இரகசிய ஒப்பந்தங்கள் செய்து ஜெயவர்த்தனா அரசைப் பலப்படுத்துகிறார்கள்.

தமிழகத்தில் EPRLF தொழிற்சங்கங்களுடனும், கம்யூனிஸ்ட்கட்சி போன்ற பொதுவுடமை அமைப்புக்களுடனும், தமிழக மக்களுடனும் நேச உறவை வளர்க்க, புலிகளோ அரசியல் சேற்றை அள்ளிப்பூசி தனிப்பட்ட கட்சிக்குப் பின்னால்போய் சுயநல நோக்குக்காக ஈழப்போராட்டத்தின் மேல் தமிழக மக்கள் கொண்ட ஈடுபாட்டை சீரழிக்கிறார்கள். திட்டமிட்ட சதிகள் மூலம் தமிழக பொலிசாருடன் இணைந்து இதர இயக்கங்கள் மீது பழி சுமத்துகிறார்கள்.

இந்தியாவை எஜமானாக அல்லாமல் நண்பனாக EPRLF பிரகடனம் செய்ய புலிகளோ இந்தியா குறித்து இரட்டைவேடம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போடுகிறார்கள். தம்மை மாத்திரம் தனியே அங்கீகரித்தால் தாம் இந்தியாவின் பூரண விசுவாசிகள் என இந்திய அரசுக்கு இரகசியத்தூது விடும் புலிகள் அதே நேரத்தில் ஈழத்தில் தம்மை வீரர்களாகக் காட்ட இந்திய எதிர்ப்பு சுவரொட்டிகளைத் தாராளமாகவே ஒட்டுகிறார்கள். இந்தியாவில் உள்ள பிற்போக்குச் சக்திகளுடன் இறுக்கமாகவே கைகோர்க்கிறார்கள்.

தமது சுதந்திர விடியலுக்காகப் போராடும் பாலஸ்தீன மக்களின் விடுதலை இயக்கங்களுடன் EPRLF நேச உறவை வளர்க்க அவர்களை அடக்கும் சியோனிச அரசுடன் புலிகளுக்கு இரகசியப் பேச்சுவார்த்தை, அமெரிக்க ஏகாதிபத்தியதலையீட்டை எதிர்த்து உக்கிரமாக EPRLF போராட அந்த அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு புலிகள் ஆலவட்டம் எடுத்து அதன் உயர் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்துகிறார்கள். சர்வதேச சோசலிச மற்றும் முற்போக்கு சக்திகளுடன் EPRLF நட்பை வளர்க்க புலிகள் சர்வதேச பிற்போக்குச் சக்திகளுடன் கூட்டுச் சேர்கின்றனர்.

இதனால் தான் சிறீலங்கா அரசு EPRLF மீது கொண்டுள்ளவிரோதத்துக்கு சற்றுமே குறையாத விரோதத்தை புலிகளின் தலைமை EPRLF மீது கொண்டுள்ளது. இவற்றின் விளைவே புலிகள் மேற்கொண்ட வெறித்தனமான நடவடிக்கைகள்... மேற்கொள்ள முயன்ற அழித்தொழிப்பு நடவடிக்கைகள். தேவையேற்படின் சிறீலங்கா அரசோடு கூட கூட்டுச்சேரத் தயாராக இருக்கும் புலிகள் தமது சர்வாதிகாரத்தனத்திற்கும்.... முதலாளித்துவச் சிந்தனைகட்கும்... சமாதான விரோதப் போக்கிற்கும் எதிராக இருக்கும் EPRLF ஐ எதிரிகளாகப் பாவிப்பதில் வியப்பேதும் இல்லை.



உண்மையிலே புரட்சிகர சக்திகளை அழிக்க முனைவதன் மூலம் புலிகள் தமது முகமூடிகளை தாமே கிழித்துக்காட்டியுள்ளனர். மக்களுக்குத் தாமே கொடுத்த எதிர்காலக் கனவுகளை தாமே உடைத்தெறிந்துள்ளனர். தமது அரசியல் வறுமையும் அராஜகத்தின் மூலம் எதையும் சாதிக்கலாம் என்ற குருட்டுநோக்கின் காரணமாகவும் இயக்கசார்பற்ற வெகுஜன அமைப்புக்களையெல்லாம் தடைசெய்து சிறீலங்கா அரச பயங்கரவாதிகளின் அடக்குமுறைகளுக்குத் தாம் எந்த வகையிலும் குறைந்தவர்கள் இல்லை என்று காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் புரட்சிகர சக்திகளையோ அன்றி மக்கள் எழுச்சிகளையோ அடக்குமுறையின் மூலமோ அல்லது அராஜகச் சட்டங்கள் மூலமோ அழித்துவிட முடியாது என்பதை சிறீலங்கா அரசுக்குக் கிடைத்த அநுபவங்களிலிருந்து கூட புலிகளின் பாசிசத் தலைமை கற்றுக்கொள்ளவில்லை. வரலாற்றுப் பாடங்களை நிராகரித்த வக்கரித்துப்போன புலிகளின் தலைமை மக்களோடு பேசும் பொதுமொழியாக இன்று அராஜகத்தைச்சுவீகரித்துக்கொண்டிருக்கிறது. பொதுவுடமை முகாமில் நின்று போராட்டத்தின் புரட்சிகர அத்தியாயங்களை எழுதும் EPRLF மீது போர்தொடுக்கிறது. இவர்களுக்கு ஈழமக்கள் விரைவில் புதுமொழியில்....புரட்சி மொழியில் பாடம் கற்பிப்பார்கள். இதை உணராமல் தமது வர்க்கநலன்களைப்பேணிக்காக்கும் ஒரே நோக்குடன் புலிகள் EPRLF மீது போர்தொடுத்தது வியப்புக்குரிய அம்சமல்ல. ஒரு வரலாற்றுக் கட்டாயமே.

*** *** *** *** *** *** *** ***

www.tamilarangam.net



# ஈழ, தமிழக, சிறீலங்காச் செய்திகள்

## ஈ.பி.ஆர்.எல்.எவ் க்கு எதிரான புலிகளின் அழித்தொழிப்பு முயற்சி முறியடிக்கப்பட்டது.

ஈழப்போராட்டத்தை முன்னெடுக்கும் இதர ஈழவிடுதலை இயக்கங்களை நிர்மூலமாக்கும் புலிகளின் தொடர்சதிகளின் ஒரு அங்கமான ஈ.பி.ஆர்.எல்.எவ்.மீது புலிகள் மேற்கொண்ட அழித்தொழிப்பு முயற்சி ஈ.பி.ஆர்.எல்.எவ் இனல் முறியடிக்கப்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டுக்குள் மீண்டுமொரு இரத்தக்களரி ஏற்படாமல் ஏற்கனவே திட்டமிட்டபடி ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகள் மறைந்து கொள்ள ஈழத்தின் இதரபகுதிகள் அனைத்திலும் புலிகளின் வெறியாட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சதிமுயற்சிகள் தொடங்கியவுடனேயே புலிகள் வெளியிட்ட அறிக்கையின் பொய்மைகளும் அம்பலமாகியுள்ளன. யாழ்.குடாநாட்டில் புலிகளின் இச்சதியினை முறியடித்த அனைத்துப் பெருமையும் மக்களையே சாரும். பல இடங்களில் புலிகளின் முகாம்களை சுற்றிவளைத்த மக்கள் புலிகளை வெளியேறாது தடுத்ததுடன் அராஜகத்திற்கு எதிரான எதிர்ப்பு ஊர்வலங்களையும் நடத்தியுள்ளனர். யாழ் குடாநாட்டில் மக்களே கவசமாக நின்று ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளை காத்துள்ள அதேவேளையில் கிழக்கு மாகாணம் மற்றும் முல்லைத்தீவு, மன்னார், வவுனியா பிரதேசங்களில் புலி இயக்கப்போராளிகள் பலர் மக்கள் விடுதலைப் படையிடம் சரணடைந்துள்ளனர். மேற்படி பிரதேசங்களில் பல புலி இயக்கப் போராளிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் போராளிகளுக்கெதிராக துப்பாக்கிப் பிரயோகம் செய்ய மறுத்து தமது பாசிசத் தலைமையின் கட்டளைகளை உதாசீனம் செய்தும் உள்ளனர்.

## யாழ் குடாநாட்டில் புலிகளின் அராஜகம்.

தங்கள் தாகமான தமிழீழத்தின் எல்லையை இப்போது யாழ்.குடாநாட்டுக்குள்ளேயே குறுக்கிக் கொண்டுவிட்ட புலிகள் குடாநாட்டுமக்களுக்கெதிராக கொடிய அராஜகத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். இயக்க அடக்குமுறைகளுக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த மக்களும் வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்களும் சிறீலங்கா கூலிப்படைகளைப் போல் இயங்கும் புலிகளினால் கைது செய்யப்பட்டு புலிகளினால் அமைக்கப்பட்டுள்ள தடுப்புக்காவல் முகாம்களில் சித்திரவதை செய்யப்பட்டுவருகிறார்கள். பல்கலைக் கழக மாணவர் போராட்டங்களை ஒழுங்குபடுத்திய 17க்கு மேற்பட்ட மாணவர்கள் புலிகளால் கடத்தப்பட்டுள்ளார்கள். யாழ்.மாவட்டத்தில் வீதித்தடைகள் போட்டு புலிகள் ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆதரவாளர்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் உறுப்பினர்களைத் தேடி வேட்டை நடத்துகிறார்கள். மக்கள் நடமாட்டத்தடை, ஊர்வலம் மற்றும் கூட்டங்களுக்குத் தடை, பத்திரிகைத் தணிக்கை போன்ற அடக்குமுறைச் சட்டங்களை புலிகள் குடாநாட்டில் அமுல் செய்திருக்கிறார்கள். தமக்கு ஆதரவாக செய்தி வெளியிட மறுத்த சற்றடே றிவியூ பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவரை ஈழத்தை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டுள்ளனர். இதுபோல இயக்கசார்பின்றி ஈழப்போராட்ட முன்னெடுப்புக்களை மேற்கொண்டுவந்த பலரை நாட்டைவிட்டு வெளியேறுமாறும் இல்லையேல் கொலை செய்யப்படுவீர்கள் என்றும் புலிகள் மிரட்டியுள்ளனர். அவர்களது இந்த அராஜகக் கூத்துக்களின் உச்சக்கட்டமாக குடாநாட்டில் யாராவது தமக்கு எதிராக அல்லது ஈ.பி.ஆர்.எல்.எவ்.க்கு ஆதரவாக பேசினால் அவருக்கு 5 கசையடியும்



500 ரூபா அபராதமும் என்றும் இத்தகைய விமர்சனத்தில் ஈடுபடுபவர் பற்றிய தகவலை புலிகளுக்கு கொடுக்காதவர்களுக்கு 2 கசையடியும் 200 ரூபா அபராதமும் என்றும் புலிகள் கோரச் சட்டமொன்றையும் பிரகடனம் செய்துள்ளனர். இத்தகைய அராஜகச் சட்டங்கள் மூலம் சிறீலங்கா நவபாசிசவாதிகளிடமிருந்து தாம் வேறுபட்டவர்கள் அல்ல என்பதை புலிகள் எம்மக்களுக்கு நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

## ஈழமக்கள் மீது கோரத்தனம், சிறீலங்கா அரசுக்கு நேசக்கரம், புலிகளின் புதிய வித்தை.

ஈழமக்களின் எழுச்சிகண்டு கிலிகொண்ட புலிகள் குருட்டுத்தனமான அரசியல் நோக்கில் அராஜகத்தை எம்மக்கள் மீது ஏவிவிட்டிருக்கும் அதேவேளையில் எமது எதிரிகளான சிறீலங்க நவபாசிச அரசோடும் அதன் கூலிப்படைகளோடும் கூடிக்குலவ ஆரம்பித்துள்ளனர். ஜனநாயக சுதந்திரத்தில் ஆசைகொண்ட ஒரேயொரு காரணத்துக்காக எமது அப்பாவி இளைஞர்களைக் கைதுசெய்து வதைக்கும் புலிகள் தாம் அன்புடன் பராமரித்து வந்த இரு இராணுவத்தினரையும் விடுதலை செய்துள்ளனர். அதுமாத்திரமல்ல அற்பமான சலுகை, அரசியல் அந்தஸ்து இவற்றை அநுபவிக்கும் நோக்குடன் சிறீலங்கா அமைச்சர் வின்சென்ட் பெரேராவுடன் பேச்சு, இரத்தவெறி பிடித்த இராணுவத்துடன் கைகுலுக்கல்கள், விருந்துண்ணல்கள், நத்தார் வாழ்த்துத் தெரிவிப்புக்கள் என்றெல்லாம் புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையிலான நேச உறவு நாளொரு வண்ணம் பொழுதொருமேனியாக வளர்ந்து வருகிறது.

## சிறீலங்கா அரசு – புலிகள் புதிய கூட்டுக்கு எதிராக ஈ.பி.ஆர்.எல்.எவ் கண்டனம்

சிறீலங்கா அரசாங்கத்துக்கும்-புலிகளுக்குமிடையே ஏற்பட்டுவரும் புதிய நெருக்கத்தையும் இரகசிய உடன்படிக்கைகளையும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வன்மையாகக் கண்டித்துள்ளது. இதுகுறித்து முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் இதுவரைகாலமும் சிறீலங்கா அரசினதும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் கைக்கூலிகளாக இருந்த தமிழர்கள் இப்போது புலிகளுக்கு நெருக்கமாகி அதன் மூலம் அரசு-புலிகள் உறவை ஏற்படுத்திப் போராட்டத்தை சிதைக்க முனைகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஈழத்தில் மனித உரிமைகள் காக்கப்படவேண்டும் எனக்கோரி சிறீலங்கா வதைமுகாம்களில் போராளிகள் உண்ணாவிரதம்.

இயக்க முரண்பாடுகள், இயக்க அராஜகங்கள், ஈழமக்களுக்கெதிரான புலிகளின் அடக்குமுறைகள் இவற்றுக்கெதிராக சிறீலங்கா வதைமுகாம்களில் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஈழப் போராளிகள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். விடுதலை செய்யப்பட்ட பிரதேசம் என்று புலிகளால் வெட்டி முழங்கப்படும் யாழ்.குடாநாட்டுக்குள் எந்தப் போராட்டமும் நடத்தும் உரிமைகளை எமது மக்கள் இழந்துவிட்ட இன்றைய நிலையில் சிறீலங்கா வதைமுகாமிலிருந்து போராட்டத்தை ஆரம்பித்து புதிய புரட்சிகர வரலாற்றை எழுத ஆரம்பித்திருக்கும் இந்தப் போராளிகள் தமது இந்தக் கோரிக்கைகளை ஈழம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முழுவதுமே தம்மைப் போன்ற போராட்ட நடவடிக்கைகளினூடாகக் கொண்டு செல்லுமாறு ஈழமக்களைக் கோரியுள்ளனர்.

<u>தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம்</u>
<u>பல்லாயிரக் கணக்கானோர் கைது</u>

இந்தி திணிக்கப்படுவதற்கு எதிராக திராவிட முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்படும் எதிர்ப்புப் போராட்டங்கள் தமிழகமெங்கும் வீறுகொண்டெழுந்துள்ளனர். மேற்படிஇந்தித் திணிப்பை பிரதிபலிக்கும் அரசியல் சட்டத்தை எரித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தி.மு.க தலைவர் கருணாநிதி உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அன்பழகன் உட்பட ஏழு சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியிலிருந்தும் நீக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் வன்செயல்களும் வெடித்துள்ளன.

**செய்திகள்....**

* ஈ.பி.ஆர்.எல்.எவ்க்கு எதிரான புலிகளின் அராஜகத்தை வன்மையாகக் கண்டித்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் கல்யாணசுந்தரம் சென்னை வந்தஅமெரிக்க செனட்டரை புலிகளின் பிரதிநிதிகள் சந்தித்த காரணம் என்ன என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

* யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் ரெலோ இயக்கம் மீண்டும் இயங்க வேண்டும் என்று கோரும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. அதேவேளையில் முல்லைத் தீவு கல்லடி ஆகிய இடங்களில் ரெலோ போராளிகள் அரச படைகளுக்கெதிரானதாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

* புலிகளின் சதிக்குத் துணையாக தமிழகத்தில் பொலிசார் இதர இயக்கப் போராளிகளுக்கெதிரான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். 50 ரெலோ-இயக்கப் போராளிகள் தமிழகப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இதை வன்மையாகக் கண்டித்த ரெலோவின் செயலதிபர் செல்வம் இதற்கெதிரான உண்ணாவிரதப் போராட்டத்திலீடுபடப் போவதாக அறிவித்துள்ளார். இதேபோல இன் ஈஸ்வரன் பிரிவைச் சேர்ந்த 7பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்

* ஈழமக்களின் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது தொடர்பான இந்தியா-சிறீலங்கா பேச்சுவார்த்தைகளில் இதுவரை எந்த தீர்வுமே கிட்டவில்லை.

* இந்திய அரசின் வெளியுறவுப் பிரிவின் முக்கியஸ்தரும், இலங்கைத் தமிழ் மக்களின்பிரச்சனை தொடர்பான விடயங்களைக் கையாண்டவருமான திரு.பார்த்தசாரதி பதவியிலிருந்து விலகியுள்ளார்.

* புலிகளின் அராஜகத்துக்கு எதிராகப் போராடும் அதேவேளையில் இன் மக்கள் விடுதலைப்படை சிறீலங்கா கூலிப்படைகளுக்கெதிரான தனது தாக்குதல்களையும் முடுக்கி விட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் கூலிப்படைகளுக்கெதிரானதாக்குதலை மக்கள் விடுதலைப் படை நிகழ்த்தியுள்ளது.





# எது உண்மையான புரட்சிசக்தி

உலக வரலாறு எமது பாடப்புத்தகமாகும். இந்தப் பாடப்புத்தகம் எமக்கு அனைத்து விதமான உண்மைகளையும் காட்டிக் கொண்டிருக்கின்றது. ஈழவரலாறு உலகவரலாற்றின்ஒரு அத்தியாயம். இந்த அத்தியாயத்திற்கென ஒதுக்கப்பட்ட அனைத்துப்பக்கங்களிலும் புரட்சிக்கு எதிரான பலவித கோலங்களை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம். அனைத்து இயக்கங்களும் தம்மைப் புரட்சிகர இயக்கம் என்றே கூறிக்கொள்கின்றன. ஆனால், இந்தக் கூற்றுகளை நாம் முழுமையாக ஏற்கமுடியாது. பிரபல பிரெஞ்சு பிற்போக்குப் பத்திரிகையான "லா பிகாரோ" ஒரு அராஜக இயக்கத்தை "வலிமையான மார்க்சிய இயக்கம்" என்று வர்ணித்தவுடன் அது ஒரு மார்க்சிய இயக்கம் என்ற முடிவுக்கு நாம் வந்துவிடமுடியாது. இதேவேளையில் பி.பி.சி யின் கணிப்புக்களில் "வலிமையாகும்" ஒரு இயக்கம் உண்மையாகவே அந்தக் கணிப்பினைப்பிரதிபலிக்கின்றது என்றும் கருதமுடியாது. தர்மம் என்ற தளத்தில் நின்றே உண்மையான புரட்சிகரச் சக்தி எது என்பதை நாம்காணமுடியும்.

கடினமான தத்துவங்களும்; தரமான வெளியீடுகளும் மட்டும் ஒரு புரட்சிச் சக்தியை இனங்கான உதவும் வழிகாட்டிகள் அல்ல. மக்கள் என்ற மாபெரும் சக்தியை-அந்தச் சக்தியின் பலம்-பலவீனங்களைக் கவனத்தில் எடுத்து-அணுகும் இயக்கம் எது என்பதை இங்கு காணப்பட வேண்டியதாகும்.

இந்த மதிப்பீட்டுக்கு உதாரணம் காட்டத்தக்கதான, 100% புள்ளிகள் போடத்தக்க இயக்கம் எதனையும் இன்று காணமுடியாது. ஆனால், 70% புள்ளிகளை வழங்கிடத்தக்க அளவிற்கு ஒரு இயக்கம் தன்னை தயார்படுத்தி வைத்திருக்கும் என்றால்-அது EPRLF

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆக இருக்கும் எனலாம். இந்த நிறுவை ஹீரோயிஸபாணியில் அமைந்ததொன்றல்ல:

அரசியல் ஆதாயங்களிற்காக "தமிழீழம்"-என்ற கோஷத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வைத்தபோது, ஒரு திடீர் துடிப்பால் கைகளைத் தட்டி "தமிழீழம் எமது தாயகம்" என்று துப்பாக்கிகளைத் தூக்கிய எமது இயக்கங்களின் அன்றைய நிலைமையுமே. இன்றுவரை தாம் எதற்காகப் போராடுகின்றோம் என்று தெரியாமல் ஆயுதங்களைத் தூக்கி தம்மைக் ஹீரோக்களாக்கி வைத்திருக்கும் இயக்கங்கள் நம்மிடையே உண்டு. அரசியல் பிரக்ஞையிடம் இருந்து அந்நியமாகி இருக்கும் இந்த இயக்கங்களை புரட்சிச் சக்திகள் என்று எப்போதுமே மதிப்பிடமுடியாது.

ஆனால் EPRLF இன் அரசியல் பிரவேசம், அந்தப் பிரவேசத்திற்காக அது வைத்த தெளிவான காரணங்கள், அதன்மீது ஒரு "தரமான மதிப்பை"க் கொள்ள உதவியாக இருந்தன. தனது அரசியல் பாதையில் பலவிதமான முட்களை மிதிக்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு அது உள்ளாக்கப்பட்டது. இந்த முட்களைப் போடுவதில் முன்னுக்கு நின்றது சிறிலங்கா இராணுவம் அல்ல, "வீரபாண்டிய வீரம்" காட்டும், தமிழ்மொழியைத் தம் தாய்மொழியாகக் கொண்ட எதிர்ப்புரட்சிச் சக்திகளாகும். சகோதரத்துவம் பேசி முதுகில் குத்தும் "நவீன தர்மத்தை"க் கடைப்பிடிக்கும் இயக்கங்களே EPRLF இன்றுவரை பட்டுக்கொண்டிருக்கும் இன்னல்களிற்கு அடிப்படைக்காரணம்.

ஈழத்தின் கடந்த மூன்றுவருட அரசியலைப் படிக்கும்போது-எது உண்மையான புரட்சிச் சக்தி?-என்ற-கேள்விக்கு நம்பிக்கையூட்டும் பதிலாக அமைவது EPRLF ஆகும். இந்த இயக்கம் ஒரு மக்கள் புரட்சிக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டிருக்கின்றது



என்பதை அதனது [illegible] நடவடிக்கைகளும் காட்டுகின்றன. ஏனும், இந்த இயக்கம் கூட சில "அடிப்படைத் தந்திரோபாயங்களை"க் கோட்டைவிட்டு, காலம் கடந்து அந்தத் தந்திரோபாயங்களின் மீது கவனம் எடுத்துக்கொண்டது என்பதை விமர்சன நோக்கில் பார்க்கும் போது மறுக்கமுடியாது. கடந்த-காலங்களில் தனது தவறுகளை மனப்பூர்வமாக ஒத்துக்கொண்ட ஒரு தன்மை, இந்த இயக்கத்திற்கு மக்களை வழிநடத்தும் ஒரு தலைமைத்துவ அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றது.

கடந்தமாதம் புலிகள் இயக்கம் EPRLF இன்மீது மேற்கொண்ட தாக்குதலும், இந்தத் தாக்குதலுக்கு எதிரான EPRLF இன் பதில் தாக்குதலும்- மக்களிடையே சரியான புரட்சிச் சக்தி எது என்பதை இனம் காட்டியிருக்கின்றன.

புலிகள் நினைத்த மாதிரி EPRLF ஐ அழித்துவிட முடியவில்லை. இதற்குக் காரணம், மக்கள்பலம் EPRLF இன் பக்கபலமாக இருந்ததேயாகும். EPRLF இற்காக மக்கள் வீதிகளில் திரண்ட தன்மை- மக்களிடையே EPRLF எத்தகைய தாக்கத்தை உண்டுபண்ணியிருக்கின்றது என்பதைத் தெளிவாக்குகின்றது. இந்த மக்கள் எழுச்சியை மீறி EPRLF ஐ அழித்துவிடமுடியும் எனப் புலிகள் கனாக்குப் போடுமாயின், அது புலிகளின் அரசியல் வாழ்வின் இறுதிக்கனாக்காகவேயமையும்.

இன்று தன்னை ஒரு உண்மையான புரட்சிச்சக்தியாக மக்களிடையே இனம் காட்டியிருக்கும் EPRLF மக்களிடையே இன்னும் ஆழமாக உள்நுழைய வேண்டும். சரியான புரட்சிச் சக்தியின் அரண் ஆயுதம் அல்ல, மக்களேயாவர். இந்தப் பிரக்ஞையை தனது கோட்பாட்டிலும், செயற்பாட்டிலும் கொண்டுள்ள EPRLF இன்று உண்மையான புரட்சிச் சக்தி என்ற தகுதிக்குரியதாகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எழுதப்படாமலேயே போயிருக்க வேண்டிய ஒரு கவிதை.

சவப்பெட்டிகளைத் திறந்து வையுங்கள்

நெடுமரப் பெருநிழல்கள்
ஒடுங்கி,
சோகமாகப்
புற்களின் மேல் விழுந்திருக்கிற
இந்த நிலத்தில்
காற்று எப்போதும் போல
விட்டு விட்டு வீசிக் கொண்டிருக்கிற
நேரத்தில்
இன்னும் நிறைவேறாத ஆசைகளும்
இலட்சியங்களும்
அழுந்து
துயர இழைகளில் ஆடிக்கொண்டிருக்கும்
ஆறடி நீளம் இரண்டடி அகலம்
என ஒரு வெளியில்

அந்த இரு
சவப்பெட்டிகளைத் திறந்து வையுங்கள்
கொஞ்ச நேரமாவது
புதிய ஆடைகள் வேண்டாம்
அகதி முகாம்களில்
மாற்றுடையின்றித்
தோய்ந்த ஆடை
உலரும் வரைக்கும்
மறைப்பினுள் நிற்கும்
நம் பெண்களை நினைப்போம்

குருதி படிந்த அங்கிகளைச்
சற்றே தளர்த்தி
ரணங்களைத் தெரிய விடுவோம்

மெல்லிய வெய்யில்
இலைகளுக் கூடாகப் பூக்களாய்
அவற்றின் மேல் உதிரட்டும்
காற்று வந்து
தடவிச் செல்லட்டும்

தலை சிதறிக்
குருதி நிலம் தெறிக்கக்
கொலை நடந்த இடத்தில்
குருதியில் ஊறிய
சுலோக அட்டை கிடந்ததை
மறுபடியும் அனைவரும் நினைப்போம்

ஒரு வகையில்,
இந்த உடல்கள் அதிர்ஷ்டம் உள்ளவை
சவப்பெட்டி
றப்பர் வாசனையின்றி எரிய
விறகுகள்
சுற்றி அழச் சுற்றம்
கண்ணீர் அஞ்சலி
கவிதை வரியில் துண்டுப்
பிரசுரம்

பெட்டியில் அடங்கும்
வாய்ப்பே அற்று

மயான மூலையில்
முகமறியா இருளில்
முகமிழந்து புதைந்த உடல்களை
பாதி எரிந்து
மீதி அழிந்து
சிதைந்த உடல்களைச்
சுதந்திரத்திற்காய்க்
களத்திலிறங்கிச்
சுதந்திரம் இழந்தவர்களை
நாம் நினையாதிருந்தால்
மிகவும் கொடிது
ஒரு எதிரியின் வேலையல்ல
எம்மவர் கொலைக்கரம்
பதித்த சுவடுகள்

கறை படியாக் கரங்களைத்
திக்கெட்டும் பறையறைந்து
கவி சொன்ன



என்வாய்க்குச்
செருப்படி

நியாயப் படுத்தத் துண்டுப் பிரசுரம்
போலித் தராசு,
நீலிக் கண்ணீர்

உதவாது தோழரே
நமது

ஒரு தேசத்தின்
அரசியல் தற்கொலை இதுவென அறியார்

கரங்களில் உயரும்
கருவிகளைப் பறிக்கும்
ஒருமக்கள் குரல்
அராஜகத்தின் வேருக்கு
ஒரு கண்ணி வெடி.

—சேரன்

ஈழ விடுதலைப் போராட்டத்தின் போர்க்கால இலக்கிய வரலாற்றின் எழுச்சிக் கவிஞனாகிய சேரன் ஜனநாயகத்துக்காகப் போராடியதால் அதன் எதிரிகளால் மிரட்டப்பட்டவன்.

சுதந்திரத்தை நேசித்ததால் புதிய சர்வாதிகாரிகளால் எச்சரிக்கப்பட்டவன்.

அராஜகத்தைக் கண்டித்ததால் அராஜகத்துக்கு உள்ளானவன்.

இவன் புதிய அடக்குமுறையாளர்களான புலிகளுக்கு தன் எழுத்துக்களை அடகு வைக்க மறுத்ததால்......... தான் பணிய மறுத்ததால் இன்று ஈழ தேசத்தை விட்டு வெளியேற வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளான்.

சொந்த மண்ணையும் சுதந்திரப் போரையும் விட்டு நீங்க மறுக்கும் சேரன் எழுதிய இந்தக் கவிதையை ஈழத்தில் பிரசுரிக்க முடியாத அடக்குமுறை இருள் சூழ்ந்த இன்றைய நிலையில் நாம் பிரசுரிக்கிறோம்.

இந்த எழுச்சிக்குரல்களையும்; எழுதும் கரங்களையும் என்றுமே அடக்கிவிட முடியாது. என்பதை புலிகளுக்கு. கூற விரும்புகிறோம்.

www.tamilarangam.net



# மரணம்

நூல் : மரணம்
ஆசிரியர் : செழியன்

வெளியீடு : சிவாபதிப்பகம்
கோமேடு,
சென்னை.

ஈழத்திலே இன்று போராளிகள் நிகழ்த்திவரும் சாதனைகளை வெறும் கொல்லப்படும் இராணுவ வீரர்களின் தலைகளை எண்ணிக் கணித்துவிட முடியாது. அதைவிட உயர்ந்த .... மகத்தான ... காலத்தால் அழியாத பணி ஒன்று உன்னதமானஎங்கள் போராளிகளால் நிகழ்த்தப்பட்டு வருகிறது. விடுதலையை வென்றெடுத்த பின்னரும்கூட என்றென்றும் நிலைத்து நிற்கப்போகிற உன்னதமான போர்க்கால இலக்கியங்கள் இன்று எங்கள் போராளிகளால் படைக்கப்படுகின்றன.

இவை வெறும் வார்த்தைக் குவியல்கள் அல்ல...., வசனக் கோவைகள் அல்ல... அடுக்குமொழிகள் இங்கே இல்லை... எதுகை, மோனை என்ற அலங்கார விளையாட்டுக்கள் இல்லை. ஆனால் இந்தப் புரட்சிகர இலக்கியங்களில் உயிர் இருக்கிறது. உயிரின் துடிப்பு இருக்கிறது. அனைத்துக்கும் மேலாக எங்கள் மக்கள் இருக்கிறார்கள். மக்களின் இன்றைய வாழ்வின் ஒவ்வொரு அங்குலமும் இருக்கிறது. போராட்டம் :இருக்கிறது. போராட்டத்தின் ஒவ்வொரு படிகளும் இருக்கிறது.

தோழில் தரித்த துப்பாக்கியை இறக்கி வைக்காமல் எதிரியைக் குறி பார்த்தபடியே இந்த மகத்தான சாதனைகளைப் பதிக்கும் எங்கள் உன்னதமான தோழர்களின் முன்னே நிறு துரும்பாய் கூனிக்குறுகி நாம் நிற்கிறோம் அந்த மகத்தானவர்களின் சாதனைக்கு முன்னே மண் பார்த்து நாம் தலை குனிந்து மனிதராய் ஏன் பிறந்தோம் என நாணி நிற்கிறோம்.

இத்தகைய உன்னத படைப்புகளில் ஒன்றுதான் செழியனின் மரணம் கவிதைத் தொகுப்பு. எங்கள் போராளிகளின் துப்பாக்கிகளில் இருந்து புறப்படும் வேட்டுக்களைவிட அவர்களது நெஞ்சங்களில் இருந்து புறப்பட்டு வரும் கவிதைகள் வலிமைமிக்கவை .என்பதை மீண்டும் ஒருமுறை தோழர் செழியன் நிரூபித்திருக்கிறார். வெறுமனே அடிமைத்தளையை அறுப்பதற்காகப் பாடப்பட்ட கவிதைகள் அல்ல .இவை. ஆதிக்கமும், அராஜகமும் எந்த உருவில் வந்தாலும் அதை எதிர்த்து நில் என்று இந்த உன்னதமான தோழனின் கவிதைகள் யுத்தப்பிரகடனம் செய்கின்றன. எல்லையில்லாத துன்பங்களைச் சுமந்து நிற்கும் எமது மக்களின் துயர்களை இந்தக் கவிஞனின் வார்த்தைகள் சுமந்து வருகின்றன.

செழியனின் முன்னுரையே அங்கே துன்பச்சுழலில் எம்மக்களைப் பரிதவிக்கவிட்டுவிட்டு தப்பி ஓடிவந்து பாதுகாப்பான சூழலில் எங்கள் நெஞ்சங்களை நெருப்பாய்ச் சுடுகிறது. முன்னுரையைச் இப்படித்தான் தொடங்குகிறார்......,

"தினமும் துப்பாக்கி வேட்டுக்களும் உயிரற்ற உடல்களும், சிதறிய இரத்தமும். எரிகின்ற மனம் கொண்ட ஒரு தேசத்தில் நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். எங்கள் தேசத்தில் இன்னமும் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எப்போதும் வாழ்ந்துகொண்டுதான் இருப்பார்கள், எரிகின்ற எம் தேசத்தில் எழுகின்ற மக்களின் கரங்களுடன் நாங்களும் இணைந்துகொள்வோம்" .என்ற சாட்டையடிகளுடன் ஆரம்பிக்கும் செழியனின் முன்னுரை இன்று எதை எங்கள் பேனாக்கள் எழுத வேண்டும் என்பது பற்றி தொடர்கிறது..." அழகிய அந்திக் காட்சிகளை, பௌர்ணமி நிலாவைப்பற்றி இன்னி எங்களால் எழுத முடிவதில்லை. சிறையிடப்பட்ட எங்களது இரவுகளை, அதிகாலைப் பொழுதுகளை, முட்களை ஏந்தும் பூக்களைப் பற்றி நாங்கள் எழுதுகிறோம்......" எனச் செழியனின் பேனா இரத்தத்தின் சூட்டைப் பிரகடனம் செய்கிறது.



மரணம் வாழ்க்கையின் முடிவு என்று தான் நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் செழியனின் 'மரணம்' கவிதையே ஒரு புதிய திசை வழியை நமக்குக் காட்டுகிறது.. இக்கவிதையில் செழியன்

முகம் தெரியாத
கரிய இருளில்
திசை. தெரியாத,
சமவெளியில்
உன் முகத்தை
எங்கே என்று
கால்களை இழந்த
நாம் தேடுவது?
நசுக்கப்பட்டவை தான்
எம் குரல்கள்

என்று எம்மைப் பிணைத்துள்ள அடிமை விலங்குகளை எண்ணிக் கலங்கும்போதும்சரி

பால் நிலவு தெறிக்க
குமுறி எழுந்து வரும்
கடல் அலையாய்
சடசடத்து இலை உதிர்க்கும்
பசுமரங்களை அதிரவைத்து
அசைந்து செல்லும் காற்றும்
எங்கள் குரல் வளைகள்
அறுக்கப்படும் வரை குரல் கொடுப்போம்

என்று கம்பீரமாகக் கர்ச்சிக்கும் போதும் சரி

மரணத்தைக் கண்டு
நாம் அஞ்சவில்லை
ஒரு அநாதைப் பிணமாய்
ஒரு அடிமையாய்
புதிய எஜமானர்களுக்காக
தெருக்களில் மரணிப்பதை
நாம் வெறுக்கிறோம்

என மரணபயம் சிறிதுமே அற்றவனை,,, ஒவ்வொரு நிமிடமும் மரணத்தை எதிர்பார்த்தவனாக... தனது மரணம் கூட அடிமைத்தனத்தையோ ஸ்பரிசிப்பதை வெறுப்பவனாக .. எங்கள் தோழன் தொடர்கிறான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மகிழ்ச்சிக்காகப் போராடி
மக்களுக்காக மரணிப்பதற்கு
நாம் அஞ்சவில்லை

எங்களுக்காகவே வாழ்ந்து மரணத்தைக் கண்டு அஞ்சி நடுங்கி இந்தப் பூமியிலே வெறும் புழுக்களாய் நெளியும் எங்கள் மனங்களிலே இந்தவார்த்தைகள் குத்தீட்டிகளாய் பாய்கின்றன. இறுதியாக

உண்மையை
மறுப்பவர்களிடம் கூறுங்கள்
எங்கள் மரணம்
அது –
ஒரு முடிவல்ல

என்று இந்தக் கவிஞன் மடிக்கும்போது போராட்டத்தின் விதைகள் மிக ஆழமாக விதைக்கப்படுவது தெளிவாகிறது

'தோழனுக்கு ஒரு கவிதை' எனும் செழியனின் இரண்டாவது கவிதை சக தோழனின் மீது அவர் கொண்ட பாசத்தையும் அவனது இழப்பினால் ஏற்பட்ட துயரத்தையும் சுமந்து வருகிறது. பயிற்சி முகாமில் மரணித்த தோழர் ராஜனின் நினைவாக பொறிக்கப்பட்ட இந்தக் கவிதையில்

அச்சம் தரும் வகையில்
சோளகக் காற்றின் தடவல்
தெருவோரத்து வேப்ப மரத்தில்
சோகம் தொனித்த
ஒரு குருவியின் கூச்சல்.....

என்று மனம் துடிக்க மரணச் செய்தியை இயற்கையே சுமந்துவந்ததாகத் துடிக்கும் இந்தக் கவிஞன்

அந்நியனால் ஆக்கிரமிக்கப்பட்டுப்போன
உனது காற்றை
அதிகாலைப் பொழுதை
உனது இரவுகளை
மீட்பதற்காய்
உன் அன்னையை, தங்கையை
உன்னை மட்டும் நேசித்தவளை
இழந்து வந்தாய்

என்று தேசத்தின் விடுதலைக்காய் பந்தபாசங்களை துறந்துவிட்டு வந்த போராளியை கௌரவிக்கும் போதும் சரி

தோழா
அந்நியர்கள் இன்னமும்
எங்கள் வயல்களில்
எங்களது வடலிகளில்
எங்களது முற்றங்களிலெல்லாம்
இன்னமும் இன்னமும்
சுற்றிச் சுற்றி
துவக்கோடு
அலைந்தபடி....



என்று எமது தேசத்தைக் கடித்துக் குதற வெறி நாய்களாய் அலையும் கலிப் படைகளைப் பற்றிக் கூறும்போது சரி

இவனையும்
இவனது துப்பாக்கியையும் கண்டு
அஞ்சியபடி
நாங்கள்
முடங்கிக் கிடக்கப்போவதில்லை
எங்கள் கரங்கள்
உயரும்
எங்கள் தேசத்து
பூக்களும் முட்களை ஏந்தும்

என்று எதிரிக்கு எதிராகப் போர்முரசு கொட்டும் போதும் சரி

மறுபடியும்
மறுபடியும்
எழுந்து வருகின்ற
உங்கள் வரவுகளுக்காக
எங்கள் கால்களை ஊன்றி
தொலைதூரப் பயணத்தில்
கரங்களை உயர்த்தி
விழிகளை நிமிர்த்திக்
காத்திருக்கிறோம்.

எனும்போது சக தோழனின் மீது கொண்ட பாசமும்... போராட்டம் எந்த அடக்குமுறைக்கும் பலியாகிவிடாது என்ற உறுதியும் செழியனின் வார்த்தைகளில் நிறைந்திருக்கின்றன.

'ஒரு பெண்ணின் காதல் கடிதம்' என்ற மூன்றாவது கவிதையில் இன்றைய ஈழப் பெண்களின் மனவுணர்வு துல்லியமாகக் காட்டப்படுகிறது. அன்பான காதலி எழுதுகிறாள்

வயதான எங்கள் அம்மா
காணாமல் போன தம்பி
இன்னமும் கன்னி கழியாத பெண்ணும்
நரை தொடரும் கோலத்தில் அக்கா...

நாலு வரிகளிலே அவள் இன்று ஈழப்பெண்கள் எதிர்கொள்ளும் அனைத்து அடக்குமுறைகளையும் குவிக்கிறாள். இதையெண்ணி அவள் அழுது புலம்பவில்லை.

இவர்களைப் பற்றியெல்லாம்
நான் உங்களிடம்
கேட்கப்போவதில்லை

இன்றைய ஈழப்பெண் இருட்டிலிருந்து ஒளியாய் கிளர்ந்தெழுவதை' செழியனின் கவிதை பிரசவிக்கிறது இப்படி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடுத்த கவிதையான 'கனநிகழ்வில்' விரலை கண்ணைக் குத்தும் கதையாக கொல்லப்பட்ட நண்பனுக்காய் கலங்கும் செழியன் அடுத்த கவிதையான 'ஒரு சிங்கள நண்பிக்கு' என்பதில் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது அநுராதபுரத்தில் நடத்தப்பட்ட வெறியாட்டம் கண்டு குமுறுகிறார்.

விழிகளில் நீர் சுமந்து
முடியாமல்
என்னைப் பிரிந்து
வழியனுப்பி வைத்த உன்னையும்
உன் தேசத்து மனிதர்களையும்
இனி எங்கனம்
நான் விழிப்பேன்

என வெட்கித் தலை குனிகிறார்.

எதுவுமே தெரியாதவர்களை
தெருக்களில் நின்றவர்களை
எல்லாம் இழந்தவர்களை
எங்கள் தேசத்தில் நிகழ்வது போலவே
அவர்கள் கொன்றனர்!

என்று செழியனின் நெஞ்சம் மொத்த ஈழ மக்களின் இற்றமற்றதன்மையை விளக்கும் போதும் சரி...

மனித நேயங்கள்
மனிதப் பண்புகள்
மரணம் அடைந்தன

எனக் கண்ணீர் சிந்தும் போதும் சரி...

மனித நேயங்களை
மரணித்த மனித உருவங்களை
மனிதத்துவம்
ஓர் நாள் தோற்கடிக்கும்

என்று சபதமிடும்போதும் சரி செழியன் தலை நிமிர்ந்து .... இனவாதம் பேசும் பலரிடையே வேறுபட்டு ... நிற்கிறார்.

அனைத்துக் கவிதைகளின் உச்சக் கவிதையாக .. வீசியெறியப்பட்ட வெடிகுண்டாக வெடிக்கிறது செழியனின் 'துப்பாக்கிகள் மட்டுமே வைத்திருப்பவர்களுக்கு' என்ற கவிதை. முரண்பாடுகள் காரணமாக கொல்லப்பட்டு இறந்து போன நண்பர்களுக்காக எழுதப்பட்ட இந்தக் கவிதை வெறும் கவிதை அல்ல. பல நெஞ்சங்களின் மனக்குரல்.

குறித்துக் கொள்கிறோம்
நண்பர்களே!
சுதந்திரத்துக்காய்ப் போராடி
சுதந்திரம் மறுக்கப்பட்ட
மனிதர்களின் வரலாற்றை



என்று குமுறும்போதும் சரி

புறப்பட்டீர்கள் ...
வேகமாக
எப்படியோ தேடிக்கொண்டீர்கள்
துப்பாக்கிகள்
வெடிகுண்டுகள்
தாக்குதல்கள்....
ஒன்றையுமே மறந்துபோய் விடவில்லை
அவசரத்தில் ஒன்றை மட்டும்
மக்களை
மறந்துவிட்டீர்கள்

என்று அராஜகவாதிகள் மறந்ததை நினைப்பூட்டி அவர்களது ஆயுத விருப்பை அரசியல் வறுமையை அம்பலப்படுத்தும்போதும் சரி செழியனே உமக்கு நாம் தலை வணங்குகிறோம்.

'சிந்தியாவுக்கு சில குறிப்புகள் என்ற கவிதையை அடுத்து அடுத்த கவிதை 'பேர்லினிக்கு ஒரு கடிதம்' தப்பிச் சிலரும் தவறிப் பலரும் தாய் மண்ணைத் தவிக்கவிட்டு தம்மை மாத்திரம் எண்ணி வெளிநாடுகட்கு ஓடி விட்டதை எண்ணித் துடிக்கும் இந்தக் கவிஞன்

எப்போதுமே
போராடிக்கொண்டேயிருக்கும்
கருங்கடல்களுக்கு அப்பால்
ஏதோ
பெயர் தெரியாத
அந்நிய தேசமொன்றில் இருந்து
திடீரென
எங்களை மீட்க
மீட்பர்கள் வருவார்கள் என
முன்பு போல
இப்போதெல்லாம்
நம்புவதில்லை
இப்போதெல்லாம்
மக்கள்
சந்தேகிக்கின்றனர்
அடிக்கடி கேள்வி கேட்கின்றனர்
தமக்குள் நீண்ட நேரம்
பேசிக்கொள்கின்றனர்.

என்று மக்கள் விழித்தெழுவதை வார்த்தைகளிலே வர்ணிக்கும் செழியன்

எங்கள் மண்ணில்
ஒரு புதிய வரலாற்றை
நானும் நீயும்
திட்டித் தீர்த்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதே சனங்கள்
எங்கள் மக்கள்
படைக்கப் போகிறீர்கள்

என்று மகத்தான சக்தியாகிய மக்கள் மீது கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்தும் போதும் சரி,

நேசமானவளே!
இதுவரை
சோவியத்திலும்
சீனாவிலும்
வியட்நாமிலுமுள்ள
மக்களால் தான் முடியுமென
நானும் நீயும்
நம்பி இருந்தது
நமது தேசத்திலும்
நிகழப்போகிறது
நிரம்ப ஆச்சரியம் தான்

என்ற செழியனின் எதிர்காலம் குறித்த உறுதியான நம்பிக்கை

இந்நிலையில்
எரிகின்ற
எங்கள் தேசத்தில்
எழுகின்ற எங்கள்
மக்களின் கரங்களுடன்
மெலிந்துபோன என் கரங்களை
இணைத்துக்கொள்வதற்காய்
நான்
எங்கள் தேசத்தில்
வாழ விரும்புகிறேன்

என்று போராட்டத்தின் மீது தான் கொண்ட உறுதியை மக்கள்மீது தான் கொண்ட விருப்பை வெளிப்படுத்தும் போதும் சரி,

மனித வேட்டையரால்
கொலை செய்யப்பட்டு
வீசி எறியப்பட்ட
எங்கள் தேசத்து இளைஞர்களின்
சடலங்களின் மேல் நடந்து
பேர்லின் விமான நிலையத்தில்
வந்து இறங்கும்
அகதிகள் கூட்டத்தில்
என்னைத் தேடி நீ அலையாதே



என்று கோழைகளாய் ... அகதிகளாய் ... அடிமைகளாய் ..... புழுக்களாய்ப்போன எம்மைப் பார்த்து சுதந்திரத்தை விரும்பும் மனிதனாய் கர்ச்சனை செய்யும் செழியனே உனக்கு ... உன் கவிதைகளுக்கு நாம் மீண்டும் மீண்டும் தலை வணங்குகிறோம்.

வெறும் வண்ண அட்டைப் படங்களுடன் கவிதைகள் என்ற பெயரில் வார்த்தை விளையாட்டுகளைக் காட்டும் நூல்கள் குவிந்துள்ள இந்நாளில் விடியலை நோக்கி போராடும் மக்களை, விடிவுக்காக ஏங்கிக் கிடக்கும் தேசத்தை வெளிப்படுத்துவதில் மாத்திரமல்ல அக்கிரமத்தை, அராஜகத்தை கோழைத்தனத்தைச் சாடுவதிலும் இந்த நூல் முன்னணியில் நிற்கிறது. போராட்டத் தீயில் செழியனும் சங்கமித்து இருப்பதால் இக் விதைகள் போராட்டத்தின் சூட்டை நமக்கு உணர்த்துகின்றன. இரத்தத்தில் எழுதப்பட்ட இந்தப் புரட்சிகர இலக்கியங்கள் நாளைய சிவந்த விடியலுக்காக எழுதப்படும் முன்னுரைகளே.

•.-•.-•.-•.-•.-•.-•.-•.-•.-•. சாந்தன் •.-•.-•.•.-•.-•.-•.-•.-•.-•.-•.

# உலக நோக்கு

பிரான்சு

மாணவர் போராட்டம் - பிரான்சு அரசுக்குப் பேரடி!
அடுக்கடுக்காய்த் தொடர்ந்து நெருக்கடி!

பிரான்சுப் பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைந்த உக்கிரமான போராட்டம் பிரான்சு அரசுக்குப் பேரடியாக அமைந்ததுடன் அரசாங்கம் மாணவரின் எதிர்ப்பைச் சம்பாதித்த புதிய பல்கலைக்கழகத் திருத்தச் சட்டத்தை மீளப்பெறவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. வசதிபடைத்தவர்களுக்கேற்ற வகையில் கொண்டுவரப்படவிருந்த பல்கலைக்கழக அனுமதி குறித்த சட்டமூலம் மாணவர்களின் கடும் எதிர்ப்பைப் பெற்றிருந்தது. மேற்படி சட்டமூலங்கள் தொடர்பாக கிளர்ந்தெழுந்த மாணவர் போராட்டங்களை அடக்குவதற்கு அரசும், பொலிசாரும் கையாண்ட முறைகள் பிரான்சு மக்களின் கடுமையான கண்டனத்துக்கு உள்ளாகியதுடன் அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் அரசும், பிரதமர் சிராக்கும் மக்களின் ஆதரவை இழந்துள்ளதைக் காட்டுகின்றன. மேற்படி மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தின்போது பொலிசாரினால் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்ட 22 வயதுடைய மாணவன் மாலிக் ஒசெக்கின் இன் இறுதி ஊர்வலத்தில் இனி ஒருபோதும் நடக்கக் கூடாது என்ற சுலோக அட்டையுடன் ஒரு லட்சத்து 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், பெற்றோர்கள், தொழிலாளர்கள் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அமெரிக்கா

**அமெரிக்காவில் சனநாயகம் மீண்டும் தலை குனிகிறது.**



ஈராலுக்கான இரகசிய ஆயுத ஏற்றுமதி, அதன்மூலம் கிடைத்த கொள்ளை இலாபத்தை இரகசியமாகவே நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளர்களுக்குக் கொடுத்தது போன்ற றேகனின் ஊழல் நடவடிக்கைகளினால் நாற்றமடையத் தொடங்கியிருக்கும் அமெரிக்க சனநாயகம் தற்போது றேகனின் உதவியாளர்களின் அருவருக்கத்தக்க நடவடிக்கைகளால் தலைகுனிந்து நிற்கிறது. மேற்படி றேகனின் ஊழல்களுக்கு துணை நின்று பின்னர் பதவி விலகிய பாதுகாப்பு ஆலோசகர் பொன்டிக்சரும் பதவி நீக்கப்பட்ட உயர் அதிகாரி நோர்த்தும் மேற்படி ஊழலை விசாரிக்கும் குழுவின் முன்னர் சாட்சியமளிக்க மறுத்துள்ளனர். அதேசமயம் இவ்விசாரணைக் குழுவின் முன் சாட்சியமளித்தவர்கள் பலமுரண்பாடான வாக்குமூலங்களை அளித்துள்ளனர். இவர்கள் தமது பொய்ச் சாட்சியங்கள் மூலம் ஊழல் குற்றச்சாட்டுக்களிலிருந்து றேகனைக் காப்பாற்ற முயல்வதும் இம்பலமாகியுள்ளது. அதேசமயம் மேற்படி ஊழல்களில் றேகனுக்கு பக்கதுணையாக இருந்த அமைச்சர் டொனல்ட் றேகன் சீ.ஐ.ஏ தலைவர் கேசி ஆகியோரும் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கைகள் அமெரிக்க மக்களிடையே வலுவடைந்து வருகிறது. றேகன் மீது அமெரிக்க மக்கள்கொண்ட நம்பிக்கையும் பெருமளவில் வீழ்ச்சியடைந்திருக்கிறது.

சனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் ஊழல் சாம்ராச்சியம் நடத்தும் றேகன் தனது ஊழல்கள் அம்பலமாகிய பின்னும் திருந்தவில்லை. நிக்கரகுவாவின் மீது தாக்குதல் நடத்தக் கொண்டுராசைத் தூண்டிவிட்டதுடன் தனது விமானங்கள், இராணுவ அதிகாரிகள் சகிதம் கொண்டுராஸ் படைகளுடன் இணைந்து நிக்கரகுவாவினுள் குண்டுவீசுத் தாக்குதல் நடாத்தியுள்ளான். அதேசமயம் லிபியா மீது தாக்குதல் நடத்துவதற்காக சாட்டிலுள்ள தனதுகைக் கூலியான கப்ரேயின் அரசுக்குப் பெருமளவு ஆயுதங்களையும் வழங்கியுள்ளான். அத்தோடு அமெரிக்காவில் பயிற்சி பெறும் நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்களை உடனடியாக நிக்கரகுவாவினுள் தாக்குதல்களை முடுக்கிவிடுமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளான்.

## பாலஸ்தீனம்

**சியோனிஸ்டுகளுக்கு எதிராக கிளர்ந்து**
**எழுகிறார்கள் பாலஸ்தீன மாணவர்கள்.**



சியோனிஸ்டுகளின் வீதிக்காடை

பாலஸ்தீன மக்களின் மண்ணை மேற்குக் கரைப் பிரதேசத்தை ஆக்கிரமித்தது போதாதென்று அங்குள்ள பாலஸ்தீன மக்கள் மீது தங்கள் கொலைக்கரங்களைத்தொடர்ந்து இஸ்ரேலியர்கள் படர விடுகிறார்கள் வீதித்தடைகள், சோதனைகள், கைதுகள், சித்திரவதைகள் என்றெல்லாம் இஸ்ரேலிய இராணுவத்தின் வெறியாட்டம் தொடர்வதற்கெதிராகப் போர்க்கொடி உயர்த்திய பாலஸ்தீன மாணவர்களுக்கெதிராகக் கொலை வெறிபிடித்த சியோனிசக் கும்பல் தமது வழமையான கொலை வெறிபிடித்த சியோனிசக் கும்பல் தமது வழமையான துப்பாக்கி மொழியில் பேச ஆரம்பித்துள்ளது. முதலில் 12 வயதுடைய மாணவனாகிய செய்துனைச் சுட்டுக் கொன்ற இஸ்ரேலிய இராணுவம் அடுத்த தினங்களில் போர் செய்த பல்கலைக் கழகத்தில் நடந்த ஆர்ப்பாட்டங்களின்போது 22 வயதுடைய இரு பல்கலைக்கழக மாணவர்களைச் சுட்டுக் கொன்றுள்ளது. இதற்கு அடுத்த தினம் பலாதா அகதிகள் முகாமில் வைத்து 14 வயதுப் பாலஸ்தீனச் சிறுவன் ஒருவனையும் சுட்டுக் கொன்றுள்ளனர். ஐ.நா பாதுகாப்புச் சபை இஸ்ரேலின் இக்கொலைகளை வன்மையாகக் கண்டித்ததுடன் இஸ்ரேலுக்கெதிரான கண்டனத் தீர்மானத்தை 14 - 0 வாக்குகளால் நிறைவேற்றியுமுள்ளது.



அதேசமயம் லெபனானிலிருந்து பாலஸ்தீன விடுதலை இயக்கப் போராளிகளை வெளியேற்றும் அமெரிக்க - இஸ்ரேலியச் சதிகள் தோல்வியடைந்து லெபனானில் பாலஸ்தீன விடுதலைஇயக்கம் மீண்டுமொரு அசைக்கமுடியாத சக்தியாக உருவெடுத்துள்ளது.

## நிக்கரகுவா

**அரக்கத்தனத்துடன் அமெரிக்கா!**
**மனிதாபிமானத்துடன் நிக்கரகுவா!**

தொடர்ந்தும்... தொடர்ந்தும்.... சர்வதேசச் சட்டங்களுக்கு முரணான வகையில் சனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிக்கரகுவா அரசைக் கவிழ்க்கும்அரக்கத்தனமான சதிகளில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈடுபட நிக்கரகுவாவே மனிதாபிமானத்துடனும் நடந்து காட்டியுள்ளது. நிக்கரகுவாவின் எதிர்ப்புரட்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கும்போது கைதுசெய்யப்பட்டு நிக்கரகுவா மக்கள் நீதிமன்றத்தில் 30 வருட கால சிறைத்தண்டனை வழங்கப்பட்ட சீ.ஐ.ஏ யின் கைக்கூலியாகிய கசன்பஸ் என்பவனை நிக்கரகுவா அரசு மனிதாபிமானத்துடன் மன்னித்து விடுதலை செய்துள்ளது. அதேசமயம் நிக்கரகுவாவின் தலைநகரான மனகுவாவிலுள்ள இராணுவத் தளங்களுக்கு அருகே மேற்படி தள வரைபடங்களுடன் சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய சாம் நெல்கோல் என்ற இன்னுமொரு அமெரிக்கக் கைக்கூலி நிக்கரகுவாப் கைது செய்யப்பட்டிருக்கிறான். இவன் விரைவில் நிக்கரகுவாவின் மக்கள் நீதி மன்றத்தின் முன் விசாரணைக்கு நிறுத்தப்படுவான்.

இது இப்படியிருக்கையில் நிக்கரகுவாப் படைவீரர்கள் அமெரிக்க ஆதரவுடன் மேற்கொண்ட கொண்டுராசின் தாக்குதலையும், எதிர்ப்புரட்சியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட சிறுசிறு தாக்குதல்களையும் வெற்றிகரமாக முறியடித்துள்ளார்கள். நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளர்கள் நிக்கரகுவா எதிர்ப்புரட்சியாளர்கள் தமது வரலாற்றின் முடிவுரையை இப்போது எழுதிக்கொண்டிருக்கிறார்கள் என்று அமெரிக்கப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

தோழர்களே!
EPIC தரும் ஈழச்செய்திகளை அறிய
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய
தொலைபேசித் தொடர்பெண் - 48-74-60-43.

www.tamilarangam.net



வியட்நாம்



தோழர்கள் தோ சின் டொங்

<u>வியட்நாம், கம்யூனிஸ்ட் கட்சியின் 6ஆவது காங்கிரஸ்.</u>

வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆறுவது காங்கிரஸில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் வீரமிகு வியட்நாம் மக்களின் வெற்றிகரமான போராட்டங்களை வழிநடத்தி வந்த கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தவாதி தோழர் லே டக் தோ, பிரதம மந்திரி தோழர் பாம் வான் டொங் பொதுக் காரியதரிசி தோழர் ரூ வாங் சின் ஆகியோர் தமது வயது தேகநிலை ஆகியவை காரணமாகப் பதவியிலிருந்து விலகியுள்ளனர். தற்போது கட்சியின் பொதுக் காரியதரிசியாக முற்போக்குச் சிந்தனைகள்கொண்ட 71 வயதுடைய தோழர் நிகியன் வன் லின் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது தெரிவு எதிர்காலத்தில் வியட்நாமின் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கான அறிகுறி எனக் கருதப்படுகிறது. இவரைத் தவிர தோழர்கள் வோ சி கொங், பாம் கங் ஆகியோரும் அரசியல் குழு உறுப்பினர்களாகத் தெரிவு நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் வியட்நாமின் போராட்ட வெற்றிகளுக்கும் வாழ்வுக்கும் பக்கபலமாக நிற்கும் சோவியத் யூனியன் தாம் வியட்நாமுக்கு வழங்கிவரும் உதவியை இரண்டுமடங்காக அதிகரிப்பதாக அறிவித்துள்ளது.

∴ பாகிஸ்தானில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் விளைவாக 180 பேர் கொல்லப்பட்டும் 700க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தும் உள்ளனர். இக்கலவரம் ஒரு வாரம் நீடித்திருந்தது.

∴ ஈராக்கிய விமானம் ஒன்று கடத்தப்பட்டு வானத்தில் வைத்தே வெடிகுண்டு வைத்துத் தகர்க்கப்பட்டிருக்கிறது. இதன்போது 62 பேர் கொல்லப்பட்டுள்ளனர். மேற்படி சம்பவத்துக்கு ஈரானே காரணம் என்று ஈராக் குற்றம் சாட்டியுள்ளது.

∴ லெபனானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு பிரான்சுப் பயணக்கைதியாகிய 54 வயதுடைய ஒரெல் கொர்னியா இஸ்லாமியத் தீவிரவாதிகளால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். 9 மாத காலம் தடுத்து வைக்கப்பட்ட இவரது விடுதலை பிரான்சு அரசுக்கும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட இரகசிய ஒப்பந்தங்களின் விளைவாக ஏற்பட்டது. எனப் பத்திரிகைகள் கூறுகின்றன.

∴ சீனாவில் அரசாங்கம் அறிவித்துள்ள புதிய கட்டுப்பாடுகளையும் மீறி சங்காய், பீகிங், ஆகிய நகர்களில் மேலதிக சனநாயக உரிமைகளைக் கோரி மாணவர்கள் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

∴ அமெரிக்கா எதிர்காலத்தில் அணுகுண்டு பரிசோதனைகளைக் கைவிடுமாயின் தாமும்



கைவிடுவதாக மீண்டும் அறிவித்துள்ள சோவியத் யூனியன் நிக்கரகுவாவிலுள் அமெரிக்கா தலையிடுவது நெருப்போடு விளையாடுவதற்கு ஒத்ததாகும் என எச்சரிக்கையும் விடுத்துள்ளது.

∴ சோவியத் அரசாங்கத்தின் புதிய கட்டுப்பாடுகளினால் 1986ம் ஆண்டு சோவியத் யூனியனில் மதுப்பாவனை 40% ஆல் குறைந்துள்ளது. இதன் காரணமாக விபத்துக்கள், மரணங்கள் குறைந்துள்ளதுடன் தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது.

∴ பிலிப்பைன்சு கம்யூனிஸ் கட்சி தனது 18ஆவது ஆண்டு நிறைவை ஊர்வலங்கள் மூலம் பல இடங்களில் கொண்டாடி வருகிறது. இவ்வூர்வலங்களில் ஆயுதபாணிகளாக புதிய மக்கள் இராணுவப் போராளிகளும் கலந்துகொண்டு வருகிறார்கள். பிலிப்பைன்சு கம்யூனிஸ்ட் கட்சி அக்கினோ அரசின் புதிய அரசியல் திட்டத்தை நிராகரித்ததுடன் மக்கள்போராட்டமே விடிவைக் கொண்டுவரும் என்று கூறியுள்ளது.

---

தோழர்களே!

" அராஜகவாதிகளின் கையில் ஈழப்போராட்டம் சிக்கி, சீரழிந்து கொண்டிருக்கும் இந்நிலையில் அராஜகத்துக்கும், அடக்குமுறைக்கும் எதிராகப் போராடும் ஜனநாயக முற்போக்குச் சக்திகளின் கரங்களை வலுப்படுத்த வேண்டியதே நமது முதற் கடமையாகும், எனவே புதிய பாதையின் சர்வாதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுக்கும் தமிழ் முரசை வலுப்படுத்துங்கள். ஈழத்தில் எம் மக்களின் அவலங்கள் புதிய அடக்குமுறையாளர்களால் நசுக்கப்பட்டாலும் ஈழத்துக்கு வெளியே தமிழ் முரசு மூலம் அவலங்களை ஒலிக்கச் செய்யுங்கள், அணிதிரளத் தொடர்புகொள்ளுங்கள் . .

THE EDITOR
'TAMIL MURASU'
EELAM LIBERATION COUNCIL
(FRANCE)
10, RUE DES MARTYRS
75009 - PARIS.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு மயக்கம்!

மதுச் சுவைக்குள் புதையவில்லை.
ஒரு மயக்கம்!
நாளின் மயக்கம்!!
நித்தமும் மயக்கம்!!!
நானோ,
மதுச்சுவைக்குள் புதையவில்லை

தத்துவக் கிளிக்கோட்டின்
விதிகளை மறந்து.....
அவனை இவனும்
இவனை அவனும்
அழித்து அழித்து
செந்நீர் பாய்ச்சி
கோடுகள் மறைய
எனக்குள் ஒரு மயக்கம்!

விதியை மாற்ற
எழுந்த வித்துக்கள்
வித்தாய் வித்தாய்
விருந்தை அழித்தும்
விதி விழவில்லை......
வித்துக்களுக்கான
கல்லறைகள் எங்கே?
அவைகளையும் கூட
இழந்து விட்டோமா....?

எங்கள் விளையாட்டிற்கு
என்ன பெயர் கொடுக்க?
கில்லா..? கிட்டியா...?
மதுச் சுவைக்குள் புதையவில்லை
இருந்தாலும்; இருந்தாலும்
ஒரு மயக்கம்!

குயில்



# மாணவர் போராட்டங்கள் மகத்தானவை

வீறுகொண்டெழும் விடுதலைப்போராட்டங்களுக்கான புரட்சிகர முன்னுரை எப்பொழுதும் பொங்கியெழுந்த மாணவர் சக்தியாலே எழுதப்பட்டு வருவதை வரலாறுகள் தெரிவிக்கிறது. கடந்தகால வரலாறுகள் மாத்திரமல்ல இன்று நம் கண்முன்னாலேயே உலக அரங்கில் பல எழுச்சிமிக்க போராட்டங்கள் மாணவ சக்தியால் வழிநடத்தப்படுவதை செய்தித்தாள்களும், தொலைக்காட்சிச் சேவையும் தெரிவிக்கின்றன. இவை அனைத்துக்கும் மேலாகக் கடந்த சில நாட்களாகப் பரிஸ் வீதிகளை நிறைத்த பல்கலைக்கழக மாணவர் போராட்டத்தையும் அதனால் ஏற்பட்ட தாக்கத்தையும் நாம் அறிவோம். அதனால் மாணவர்கள் போராட்டம் பற்றிய ஆராய்வுகளை நாம் இங்கிருந்தே தொடங்குவோம்.

பிரான்சின் புதிய வலதுசாரி அரசின் பல்கலைக்கழக கல்விப் புனரமைப்புத் திட்டத்துக்கெதிராக பிரான்சின் பல்கலைக்கழக மாணவர்கள் போர்க்கொடியுயர்த்தினர். மேற்படி அரசின் திட்டத்தை மாணவர்கள் புனரமைப்புத் திட்டமாகவே கருதவில்லை. தமது சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் தோண்டப்படும் புதைகுழியாகவே கருதினர். பல்கலைக்கழக அனுமதிக்கட்டண அதிகரிப்பு, தனியார் பல்கலைக்கழகங்களுக்கு பட்டதாரிச் சான்றிதழ்கள் வழங்கும் அதிகாரம் போன்ற திருத்தங்களைத் தாங்கிவரும் அரசின் இந்தத் திட்டம் பிரபல்யமானபல்கலைக்கழகங்கள் தமது கட்டணங்களை அதிகரித்துக்கொண்டு செல்வதற்கும் வசதிபடைத்தவர்கள் இப்பிரபல்ய பல்கலைக் கழகங்களின் வாய்ப்புகளைத் தேடவும் ஏழை மாணவர்கள் குப்பைக்கூடைகளில் எறியப்படவுமே வழிகோலும் என்றே மாணவர்களால் கருதப்படுகிறது.

மேற்படி திட்டத்தை அரசு மீளப்பெற்றுவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் அமைதியாக மாணவர்கள் போராட்டம் ஆரம்பமாகியது. வீதிகளை நிறைத்த மாணவர்கள் வன்முறையை நாடவில்லை. ஆனால் முதலாளித்துவ அரசுகளின் பாரம்பரியங்களைப் பேணிக் காக்காமல் பிரான்சின் வலதுசாரி அரசு விட்டுவிடுமா? அமைதிப்போராட்டம் நடத்திய மாணவர்மீது பொலிசார் வன்முறைத்தாக்குதலை நடத்தினர். அரசு மாணவர்களின் கோரிக்கைகளைப் படித்துப் பார்க்காமலே நிராகரித்தது. சட்டமூலத்தை மீளப்பெற மறுத்தது. கிளர்ந்தெழுந்தமாணவர்கள் அரச வன்முறைக்குப் பதிலாக வன்முறையையே அளித்தனர். மீண்டும் ஒரு 1968 வந்துவிடுமோ என்று அரசு அஞ்சியது. மாணவர்களின் எதிர்ப்பின் சூடு தாங்காது மேற்படி சட்டமூலத்தின் காரணகர்த்தாவான கல்வியமைச்சர் டெவாகுவே பதவி விலகவேண்டி வந்தது. மேற்படி சட்டமூலத்தின் சில சரத்துகளை மீளப்பெற முன்வந்த பிரதமர் ஜக் சிராக் முழுமையாகவே சட்டத்தை மீளப்பெற வேண்டி வந்தது. இது பிரதமர், பதவிக்கு வந்தபின் சந்தித்த பெரும் தோல்வியாகக் கருதப்படுகிறது. கடந்த சில மாதங்களாகச் சிராக்கின் அரசுகொண்டு வந்த பல சட்டத் திருத்தங்களை சனாதிபதியாலோ அன்றி எதிர்க்கட்சிகளாலோ அன்றித் தொழிற்சங்கங்களாலோ தடுக்கமுடியாமல் இருந்திருக்கிறது. ஆனால் மாணவர் போராட்டங்கள் தடுத்துவிட்டன. மாணவர்களின் இந்தப் போராட்ட வெற்றி அரசுக்குக் கிடைத்த பெரும் அடி மாத்திரமல்ல பிரதமர் சிராக்கின் எதிர்காலக் கனவுக்குக் கூட ஆபத்தை ஏற்படுத்துவதாக அமைந்துவிட்டது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரான்சுப் போரமுனை இப்படியிருக்கையில் அடுத்த போர்முனை இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் பலஸ்தீன மண்ணிய மேற்குக் கரையில் பலஸ்தீன மாணவர்களால் திறக்கப்பட்டிருக்கிறது. தொடரும் சியோனிச அடக்குமுறைகளுக்கெதிராக மேற்குக் கரையிலுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம், எதிர்ப்பு ஊர்வலம் எனப் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். இந்த மாணவர் போராட்டத்தை வழமைபோலத் தமது துப்பாக்கிக் குண்டுகளால் அடக்க முனைந்த இஸ்ரேலிய இராணுவத்தின் இரத்த வெறிக்கு ஆறு பாலஸ்தீன மாணவர்கள் பலியான போதும் மாணவர்களின் போர்க்குணம் மழுங்கவில்லை. மாறாக மேற்குக் கரைப் பகுதியில் தடைசெய்யப்பட்டிருக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கக் கொடிகள் யசீர் அரபாத்தின் படங்கள் ஆகியவற்றைத் தாங்கியபடி மேலும் உக்கிரமான எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

இதற்கு எவ்வகையிலும் சளைக்காத வகையில் தென்னாபிரிக்க நிறவெறி அரசுக்கெதிராகப் போராடும் கறுப்புஇன மாணவர்களும் கிளர்ந்து நிற்கிறார்கள். ஏற்கெனவே 2000க்கும் மேற்பட்ட மாணவர்களை சர்வதேச சட்டங்களுக்கு மாறாகக் கைதுசெய்து காவலில் வைத்துச் சித்திரவதைப்படுத்தும் நிறவெறியரசின் கொடுங்கோன்மைக்கெதிராகக் கிளர்ந்தெழுந்த மாணவர்கள் மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

இந்தப் போராட்டங்களுக்குச் சமாந்தரமாக தென்கொரியாவில் சர்வாதிகாரத் தலைமை மாறவேண்டுமென்று கோரிப் போராட்டம் [illegible] தென்கொரியப் பல்கலைக் கழக மாணவர்களது போராட்டம், சீனாவில் சனநாயகம் நிலைநிறுத்தப்பட வேண்டும், மக்களுக்கு மேலதிக சனநாயக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றுகோரி எழுச்சி கொண்டுள்ள பீகிங் பல்கலைக் கழகமாணவர் போராட்டம், ஊழலும், சர்வாதிகாரமும் நிறைந்தபங்களாதேஷ் அரசுக்கு எதிரான மாணவர்கள் போராட்டம் ஆகியனவும் வீறுகொண்டெழுந்துள்ளன.

இப்படி உலகம் பூராவும் மாணவர் போராட்டங்கள் கிளர்ந்தெழுந்திருக்கும் இவ்வேளையிலே ஈழத்திலும் யாழ் பல்கலைக்கழக மாணவரின் போராட்டம் மக்களையும் இணைத்தபடி மக்கள் போராட்டமாகியது. ஆனால் உலகளாவியரீதியாகக் கிளர்ந்தெழுந்திருக்கும் இதர மாணவர் போராட்டங்களிலிருந்து இந்த ஈழ மாணவர்களின் போராட்டம் வருத்தத்துக்குரிய முக்கிய அம்சமொன்றில் வேறுபட்டு நிற்கிறது. ஆம் இன்று எமது பாசமிக்க . . பல்கலைக்கழக மாணவர்கள்.. ஈழவிடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தியவர்கள்... பலர் வாழ்வையே தியாகம் செய்தவர்கள் போராடுவது ஒரு முதலாளித்துவ அரசுக்கோ அன்றி ஒரு ஆக்கிரமிப்பு அரசுக்கோ அல்லது ஒரு நிறவாத அரசுக்கோ என் ஒரு அடக்குமுறை அரசுக்கோ அன்றிச் சர்வாதிகார அரசுக்கெதிராக அல்ல. விடுதலைக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொள்ளும் இயக்கங்களுக்கு எதிராகத்தான். இது குறித்து... இயக்க அராஜகங்கள் பற்றி ஈழ மக்களாகிய நாம் அனைவருமே வெட்கித் தலைகுனிய வேண்டும்.

தமது சக மாணவன் கடத்தப்பட்டதற்கு எதிராக... அராஜகத்திற்கு எதிராக குமுறி வெடித்த யாழ்.பல்கலைக்கழக மாணவர்களின் . . . சாகும்



வரை உண்ணாவிரதப் போராட்டம் உச்சகட்டத்தை அடைந்தபோது மக்கள் எழுச்சியை உடைக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் விடுதலைப் புலிகள் பொய்வாக்குறுதிகள் மூலம் குலைக்கப்பட்டது. புலிகளின் வாக்குறுதி பொய்யாகிப் போனதால் கொதித்தெழுந்த மாணவர்களின் கிராமங்கள் ரீதியிலான எதிர்ப்பு ஊர்வலங்கள்... கூட்டங்கள்... வீதிமறிப்புப் போராட்டங்கள் மீண்டும் ஒரு புதிய மக்கள் எழுச்சியை ஏற்படுத்தியது. மீண்டும் இந்த எழுச்சியை புலிகள் தமது வழமையான ஆயுதமாகிய அராஜக அடக்குமுறை மூலம் உடைக்க முயன்றனர். ஊர்வலம் பல இடங்களில் குண்டர்களால்த் தாக்கப்பட்டது. பின்னர் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டத்தை அமைத்த மாணவர்கள் புலிகளால் கடத்தப்பட்டனர். கொல்லப்பட்டனர்.

இவற்றைத் தமது வீரப்பிரதாபங்களாக ஒலிபெருக்கிகள் மூலம் யாழ் குடாநாட்டில் உறுமும் புலிகள் ஒன்றை மறந்துவிட்டனர். சகல வல்லமை படைத்த முதலாளித்துவ அரசாங்கங்களையே பணிய வைத்து வெற்றி பெற்றுவிட்ட மாணவர் போராட்டங்களை முதலாளித்துவக் கைக்கூலிகளான தம்மால் சிதைத்து விட முடியும் என்பது புலிகளின் தவறான நினைப்பு. நீறுபூத்த நெருப்பாய் இருக்கும் இந்த ஈழ மாணவர்களின் போராட்டம் புலிகளின் அராஜகத்தை விரைவில் சுட்டு எரிக்கும். இது ஈழ வரலாறு காட்டப்போகும் உண்மை.

*****************************************  ****
**********************************************







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திசை அறியா அன்னையின் இதயக்குமுறல்

* ஆயுத ஆட்சி நடத்தும் புதிய சர்வாதிகாரிகளால் கடத்தப்பட்டு காணாமல் போய்விட்ட யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனின் தாயார் எழுதிய கண்ணீர்க் கடிதம்.

அன்பான மக்களே, அன்புக்குரிய விடுதலை இயக்கங்களே, தமிழீழத்தின் மனச்சாட்சியே!

எனது மகன் விஜிதரன் கடத்திச் செல்லப்பட்டு இன்றோடு 14 நாட்கள் ஆகிவிட்டன. இவன் காணாமல் போய்விட்டான் என சிலர் சொல்கிறார்கள். ஏதோ ஒரு சதித்திட்டத்தின்படிதான் அவன் மாயமாக மறைந்துவிட்டான் என வேறுசிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். தானாகக் காணாமல் போவதற்கு என்னுடைய விஜி என்ன விரல் சூப்பும் வயதில் உள்ள ஒரு சின்னக் குழந்தையா? அனைத்து இயக்கங்களும் கை விரிக்கின்றன. விடுதலை இயக்கங்களே என்னுடைய விஜியை என்ன செய்தீர்கள் என்றாவது சொல்லுங்கள்.

சென்றவருடம் இதேமாதம் இதே திகதி என்னுடைய மகன் விஜியை மட்டுநகரில் வைத்து கொமாண்டோ படையினர் பிடித்துச் சென்றபோது அவர்களது முகாமுக்குச் சென்று நான் மன்றாடினேன். 'என்னுடைய விஜி ஒரு பாவமும் அறியாதவன், மாணவன் அவனை விட்டுவிடுங்கள் என்று' என்னுடைய கண்ணீரைப் பார்த்து அவர்கள் விஜியை விடுதலை செய்து விட்டார்கள்.

அவர்கள் அந்நியர்கள்தான். அடக்குமுறை இராணுவம் தான். என்றாலும் ஒரு தாயின் கண்ணீரை, புத்திர சோகத்தில் புலம்பும் ஒரு தாயின் துயரை சில சந்தர்ப்பங்களிலாவது அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் எமது போராளிகளுக்கும், எமது இயக்கங்களுக்கும் இன்னமும் எனது கண்ணீர் சுடவில்லையா? விடுவிக்கப்பட்ட பிரதேசம் என்று ஓயாது கத்திக்கொண்டு திரியும் யாழ்ப்பாணத்துத் தெருக்களிலிருந்து எனது விஜி எப்படிக் காணாமல் போகமுடியும்.

சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் இலங்கையில் காணாமல் போனவர்களின் பட்டியல் என 250க்கும் மேற்பட்டவர்களின் பட்டியலை வெளியிட்டிருந்தது உங்கள் எல்லோருக்கும் தெரியும் தானே. சிறீலங்கா அரசில்தான் காணாமல் போனவர்கள் இருக்கமுடியும் என நினைத்திருந்தோம்; தமிழீழத்திலும் தமது புதல்வர்கள் கடத்தப்படுவார்கள், காணாமல் போவார்கள் என்று எந்தத் தமிழ்த்தாயாவது நினைத்திருப்போமா?



இயக்கங்களே! இயக்கங்களே! எனது மகனைத் திருப்பித் தாருங்கள். உங்களுடைய வீட்டுக்கு நம்பிக்கையைத் தாருங்கள். நீங்கள் எமக்குத் தெரியாது என்று கை விரித்துவிட்டால் அதனை உண்மை என்று நம்புவதற்கு இந்த தாயின் மனம் தயாராக இல்லை. என்னைப் போலவே; ஏராளமானவர்கள் நீங்கள் சொல்வதை நம்பவில்லை. விஜி திரும்பி வரமாட்டான் என உங்களுக்குச் சர்வ நிட்சயமாகத் தெரிந்தால் அதனையாவது சொல்லுங்கள் காலம் என்னுடைய துயரை மெல்ல... மெல்லக் குறைக்கட்டும் என்று காலத்தைக் கழிக்கிறேன்.

ஒரு முறை தெரியாமல் தெரிவு இல்லாமல் நடுவழியில் நிற்கும் திசைதெரியாத கப்பல் போல என்னைத் துன்பப்படுத்தாதீர்கள். என்னைப் போன்ற தாய்மார்களின் கண்ணீர் விசுவாசத்திரரின் சாபத்தைவிட மோசமானது என்று என்னைச் சொல்ல வைக்காதீர்கள்.


தயவு செய்யுங்கள்; கருணை காட்டுங்கள். என்னுடைய மகனை... என்னுடைய விஜியை என்னிடமே திருப்பித் தாருங்கள்.

இப்படிக்கு

திருமதி. புவனேஸ்வரி

அவெனஸ்வரன்

17. 11. 1986



ஒவ்வொரு வாரமும் சனி, செவ்வாய் ஆகிய இரு தினங்களிலும் F.M 105.25 MHS அலை வரிசைகளில் இரவு 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையும் கேட்கலாம்.

EPPLF இன்

ஈழவானொலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழமக்களே சிந்தியுங்கள்!
# உண்மையினைத் தெரிந்துகொள்ளுங்கள்!

## பிலிப்பையா எட்வேட்

படைப்பு: 20-03-1953 அழிப்பு: 01-11-1986

கூட்டணி காலம் தொடக்கம் தமிழீழம்! தமிழீழம் காண்போம் எனக் கனுக்கண்டு கூட்டணியின் தாசனாய் மயங்கித் திரிந்தவன் எங்கள் எட்வேட்

மேடையிலே வண்ணை ஆனந்தனுக்குக் கரத்தைக் கீறி வீரத்திலகமிட்ட உன் வீரக் கைகளையா மகனே; அடித்துக் குத்தி முறித்துள்ளார்கள் கொடிய வேங்கைகள்.

அந்தநாள் தொட்டு இந்தநாள் வரை ஆர்ப்பாட்டமா? ஊர்வலமா? கூட்டமா? உண்ணு விரதமா? எதுவானாலும் முன்னின்று சைக்கிளில் பறந்து திரிந்து ஆட்களைச் சேர்த்து திரட்டி அழைத்துப் போகும் உன் வீரக் கால்களையும் அடித்து முறித்துவிட்டார்களே கொடிய வேங்கைகள்

வெளிநாட்டிலிருந்த போதும் சரி, தமிழீழம் வந்து சேர்ந்த இந்த ஒரு வருடத்திலும் சரி எந்தப் போராட்டக் குழு கேட்டாலும் இல்லையென்னாது வாரி வழங்கிய உன் கைகளையா அடித்து முறித்தார்கள் மாபாவிகள்!

''தமிழீழம் காண்போம், தமிழீழம் காண்போம்'' என இனிமேல் என்னுதோ என்ற உன் கழுத்தை முறித்தார்கள் அத்தக் கொடிய அரக்கர்கள்.

நரகாசுரனைக் கொன்ற தீபாவளி தினத்தை இந்துக்கள் கொண்டாடிய அன்று உன்னையும் ஒரு அசுரனாக எண்ணிக் கொண்டார்களா அந்த இதயமே இல்லாதவர்கள்?

எங்கள் நேச யேசுவைக் கூட விசாரித்துத் தீர்ப்பு வழங்கினனே பிலாத்துஸ்? உன்னையும் விசாரித்தா மரண தீர்வையிட்டார்கள்.

மாவீரன் விக்டரையும், ரேமையும் கொன்ற இரண்டு சிங்கள இராணுவத்தினருக்கு மனிதாபிமான அடிப்படையிலே பராமரிப்பு, புலி கிட்டுமாமாவை கொல்ல வந்த சிங்கள இராணுவத்தின் கைக்கூலியான அரியாலையைச் சேர்ந்தவனுக்கு மக்களின் தீர்ப்பு, ஆனல் ஒரு நிமிடம் உணர்ச்சி வேகத்தில் சிந்தியாது தன்னை மறந்து ஒரு போராளித் தலைவனை அடித்ததற்கு உனக்கு மரண தண்டனையா? தமிழீழ மக்களே, தாழ்க்குலமே புலிகளின் தீர்ப்பை பாருங்கள் இது நியாயமா? என்று சிந்தியுங்கள்.

ஒரு அடிதான் அடித்தோம் இறந்துவிட்டான் என்றனரே, ஒரு அடியிலே இறக்க அவனென்ன நோயாளியா? நோஞ்சானு? இல்லைச் சகோதரர்களே இல்லையில்லை உரமேறிய உடலைக் கொண்ட கடற்தொழிலாளி அவன் உருவத்தில் சிறியவன் ஆனல் அவன் கையின் வலிமையை அனுபவித்தவனுக்குத்தான் தெரியும். இப்பேர்ப்பட்டவனை ஒரே அடிதான் அடித்தோம் இறந்துவிட்டான் எனக் கூசாமற் கூறும் வேங்கைகளே அவன் உடலில் உள்ள காயங்கள் கூறுகின்றனவே அவனுக்கு நடந்த சித்திரவதையை.

இன்று எட்வேட்டுக்கு நடந்த கதி நாளை உங்களுக்கும் ஏற்படலாம், பாலூட்டி வளர்த்த பாம்பே அவனைக் கடித்தது போல, வளர்த்த கடா மார்பிலே பாய்ந்ததுபோல அவனுக்குத் துடிக்கப் பதைக்க இவ்வித தண்டனை அளித்த கொடிய வேங்கைகளே தெய்வம் தான் உங்களைக் கேட்கவேண்டும்.

எங்கள் நேச யேசுவே! கொடிய யூதர்கள் உம்மைச் சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்து கொன்றபோது எல்லாவற்றையும் நீர் நல்ல மனத்துடன் ஏற்றுக் கொண்டீர், ஆனல் எங்கள் மகன் எட்வேட் சாதாரண ஆசாபாசங்களுள்ள ஒரு மனிதன் அவன் தெய்வமல்ல கடைசி நேரத்தில் தன் ஆசை மனைவியை நினைத்திருப்பானா? தன் ஒரே மகனை (7வயது) நினைத்திருப்பானு? அல்லது தன் மனைவியின் வயிற்றில் 4 மாதமாகக் கருக் கொண்டிருக்கும் அந்தப் பிஞ்சை நினைத்திருப்பானு? நீ போ மகனே! உன்னை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று வழியனுப்பி வைத்த நோயாளித் தாய் தந்தையை நினைத்திருப்பானு? அல்லது பன்னிரண்டு பிள்ளைகளில் இரண்டாவது ஆண்மகனய்ப் பிறந்து தன் 7 தங்கைகளையும் 3 தம்பிகளையும் காப்பாற்றி தன் 4 தங்கைகளுக்குத் திருமணம் முடித்து வைத்த அந்தக் கடமை வீரன் அந்தக் கடைசி நேரதிதில் தன் ஆசை அண்ணனை, தன் அருமைச் சகோதரிகளை அன்புத் தம்பிகளை நினைத்திருப்பானு?

தன் தாயை, சகோதரியை தன் கண்முன்னுல் அடிப்பதைப் பார்த்தும் பேசாது வாழா இறப்பவன் ஒரு ஆண்மகனல்ல அவன் ஒரு பேடி.

தன் கண்முன்னுல் தன் சித்தியை மார்பிலே பிடித்துள் தள்ளியதையும் தன் மாமியை அடித்ததைக் கண்டு நியாயம் கேட்டபோது நாலுபேர் சேர்ந்து தனக்கு அடித்ததையும் பொறுத்துக்கொண்டு தன் கையினுல் மலரவனை ஒரு அடியினுல் வீழ்த்திய பெருமை மிக்க சிங்கம் எங்கள் எட்வேட்.

அவனது பெருமையை, புகழை உலகறியச் செய்த வேங்கைகளே உங்களுக்கு நன்றி.

வேங்கைகளே பதில் கூறுங்கள் இது நியாயம் தானு? மக்களுக்காக இயக்கங்களா? இயக்கங்களுக்காக மக்களா? மக்களுக்காக தமிழீழ விடுதலை காணப்போகிறீர்களா அல்லது இதே ரீதியில் மக்கள் எல்லோரையும் கொன்றுவிட்டு வெறும் குருதி தோய்ந்த மண்ணுக்காக தமிழீழம் காணப் போகிறீர்களா? எட்வேட் கொள்ளையடிக்கவில்லை, கொலை செய்யவில்லை கற்பழிக்கவில்லை, காட்டிக் கொடுக்கவில்லை, தேசத் துரோகியுமில்லை ஏன் இந்த மரண தண்டனை? பதில் கூறுங்கள்.

பாஷையூர் மக்கள்





# "ஆயுதப் போராட்டமே எமக்கு எஞ்சியிருக்கும் ஒரே வழி"

## தோழர் பத்மநாபா

[ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமான தோழர். பத்மநாபா 'லிங்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் தமிழாக்கம்.]

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமான தோழர் க. பத்மநாபாவுடன் நடைபெற்ற விஷேட பேட்டியின்போது நமது பல வேறு கேள்விகளுக்கு அவர் அளித்த பதில்களின் சாராம்சம் கீழ் தரப்படுகிறது. ஈழம் பேச்சுவார்த்தைகளின் மூலம் பெறப்படுவது சாத்தியமா? யாழ்ப்பாணக் குடா நாடு தனியொரு விடுதலைப் போராளிகளின் குழுவின் மட்டுமே கட்டுப்பாட்டிலுள்ளதா? பல்வேறு விடுதலைப் போராளிகள் குழுக்களிடையே நடைபெறும் மோதல்களுக்கான அடிப்படைக் காரணமென்ன? ஜே ஆர் ஜெயவர்த்தன மனச்சுத்தியுடன் இனப்பிரச்சனையைத் தீர்க்க விரும்புகிறாரா? ஈழப்போராட்டம் சீக்கியரின் காலிஸ்தான் போராட்டத்தோடு ஒப்பிடக்கூடியதா? இதுபோன்ற இன்னேரன்ன விடயங்கள் இக்கேள்வி பதில்களில் ஆராயப்படுகிறது.

கேள்வி:- இலங்கையின் தற்போதைய நிலைமையைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- இரண்டு வகையான நிலைமைகள் இலங்கையில் இன்று காணப்படுகின்றன வடகீழ் மாகாணங்களிலும், இந்தியத் தமிழ் வம்சாவழியினர் வாழும் மத்திய மலைப் பிரதேசங்களிலும் ஒரு நிலைமை, தீவின் பிற பகுதிகளில் இன்னொரு நிலைமை நாடற்றோர் பிரச்சினை மேலும் தீவிரமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் அரசாங்க எதிர்ப்புச் சக்திகள் நாடளாவிய ரீதியில் ஒன்றிணைந்து வருகின்ற பிறிதொரு வகையான மாற்றமும் அங்கு காணப்படுகின்றது. இந்நிலைமை சகல நிலைமைகளுமான எம் ஆயுதப் போராட்டங்களாலும் தமிழ் மக்களும் தமிழ்மக்களின் எதிர்ப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாலும் மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறான நிலைமை தொடர்ந்துகொண்டிருக்கையில் பேச்சுவார்த்தை என்ற நாடகமாடுவதன் மூலம் இனப் பிரச்சனையைத் தீர்க்க முடியும் என்று யாராவது எண்ணினால் அது வியப்புக்குரியதே. தமிழ் மக்களுக்கு நிம்மதி என்பது உண்மையிலேயே இன்று இல்லை.

மத்திய மலைப் பிரதேச தமிழ் மக்களைப் பொறுத்த வரைக்கும் அவர்கள் வடகிழ் மாகாணங்களில் தமிழ் மக்களைப் போன்றே நிம்மதியற்றிருக்கின்றார்கள். தமிழர் என்ற ரீதியில் இனப்பாகுபாடு காட்டப்படுவது ஒருபுறமிருக்க வர்க்க ரீதியிலும் சிங்கள சமூகத்திலுள்ளமுற்போக்குச் மற்றும் மனித உரிமை வாதிகள் நசுக்கப்படுவதைப் போலவே ஜே ஆர் ஜெயவர்த்தன ஆட்சியால் தொடர்ந்து சுரண்டப்படும் நசுக்கப்பட்டும் வருகின்றார்கள். மேற்குறிப்பிட்ட முற்போக்கு மற்றும் மனித உரிமை வாதிகள் தம் சிங்கள சமூகத்திற்கு தமிழ் மக்கள்படும் துயரையும் துன்பங்களையும் எடுத்துக்காட்டி ஜே ஆரின் பாசிசக் கொள்கைகளையும் சாடி வருபவர்களாதலால் அவர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் தென் பகுதியில் சற்றேறக்குறைய 500 பேர் வரை ஜே ஆரால் கடந்த இரண்டு மூன்று மாதங்களில் கைது செய்யப்பட்டிருப்பது எனது இக்கூற்றை வலுப்படுத்துகிறது.

கேள்வி:- ஒரு குறிப்பிட்ட இயக்கமொன்று மிகப் பலம் வாய்ந்ததென்றும் முழு யாழ்ப்பாண தீபகற்பகமுமே அவ்வியக்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளதென சில அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

பதில்:- இது முழுவதும் உண்மையல்ல. வடக்குப் பகுதியின் ஆயுதப் போராட்டமானது பல இயக்கங்களின் பங்களிப்பைப் பெற்றே வளர்ந்திருக்கிறது எந்தவொரு தனி இயக்கமும் தாம் மட்டுமே வலிமையானதெனச்சொல்லமுடியாது. எப்படியென்றாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் மட்டுமே மற்றைய இயக்கங்களை விடவும் இராணுவ ரீதியில் வலிமை வாய்ந்தவை என்பது உண்மை. பொது மக்களின் ஆதரவைப் பொறுத்த வரைக்கும் ஈழமக்கள் புரட்சிகர முன்னணியே வடக்கிலும் கிழக்கிலும் அநேகமாக முன்னணியில் இருக்கின்றது. மேலும் வடக்கிலிருந்து இராணுவத்தை முற்றாகவே விரட்டியடித்து விட்டோம் என்று யாரும் உரிமை பாராட்டி விடவும் முடியாது. பல வேளைகளில் இராணுவ முகாம்களில் இருந்து செல்குண்டுத் தாக்குதல் நடப்பதும் சில வேளைகளில் இராணுவம் முகாம்களை விட்டு வெளியேற முயற்சிப்பதும் நடந்துகொண்டே இருக்கிறது. அப்படியிருப்பினும் சகல இயக்கங்களினதும் கூட்டு எதிர்த்தாக்குதலால் இராணுவத்தின் இந்நடவடிக்கைகள் ஒருவாறு கட்டுப்படுத்தப்படுகின்றது.



கேள்வி:- கிழக்கு மாகாணத்தில் போராட்ட நிலைமை எவ்வாறு உள்ளது?

பதில்:- இங்கு இராணுவம் தன் நடவடிக்கைகளை மென்மேலும் தீவிரப்படுத்தி உள்ளது. இராணுவமானது கிழ் மாகாணம் அமைந்துள்ள பூகோள நிலைமையைத் தன் செயற்பாடுகளுக்குச் சாதகமாகப் பயன்படுத்திவருவது ஒருபுறமிருக்க போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதனங்களினது பற்குக்குறை, பிற குறைபாடுகள் உட்பட்டமாக போராளிகள் பல்வேறு சிரமங்களை அங்கு எதிர்நோக்கவேண்டி உள்ளது. அரசாங்கம் திட்டமிட்ட ரீதியில் முஸ்லிம் - தமிழ் இனக் கலவரங்களையும் தூண்டி வருவதால் நிலைமை இங்கு மேலும் குழப்பமடைகிறது. எனினும் இஸ்லாமிய அடிப்படைவாதிகளும் பௌத்தமத வெறியர்களும் அரசாங்க ஆதரவு காட்டி வருகின்றமையால் வறிய மற்றும் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள், ஏழைகள் என்போர் முஸ்லிம் சமகத்தைச் சார்ந்தோராயிருந்தும் போராளிகள் பக்கமே உள்ளனர்.

கேள்வி:- பல்வேறு இயக்கங்களிடையே எழும் மோதல்களுக்கான அடிப்படைக் காரணம் என்ன? இவ்வகையான நடவடிக்கைகள் அவ்வவ் இயக்கங்களின் செல்வாக்கைக் குறைக்குமல்லவா? நீங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

பதில் இம் மோதல்கள் மிக நிச்சயமாக இயக்கங்களின் செல்வாக்கைக் குறைப்பதோடு மட்டுமல்ல மக்களின் உற்சாகத்தையும் குறைக்கும். குறிப்பிட்ட இயக்கங்களின் குறைபாட்டை, முக்கியமாக மற்றவர்களைத் துப்பாக்கி முனையில் அடக்கி ஏனைய இயக்கங்களையும் தம் பிடிக்குள் கொண்டுவர எண்ணும் இயக்கங்களின் குறைபாட்டை இது தெளிவாகக் காட்டுகிறது. இம்முனைப்பு சில விடுதலை இயக்கங்களிடையே காணப்படுகிறது. இரண்டாவதாக வெளிச் சக்திகள் இயக்கங்களின் இம்மாதிரியான மோதல்கள், வேறுபாடுகளைப் பெரிதாக்கி விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பவும் பலவீனப்படுத்தவும் எண்ணி இப்படிப்பட்டவற்றைப் பெரிதாக்கிக் காட்டவும் பயன்படுத்தவும் ஏங்கிக் காத்திருக்கின்றன. இம்முனைப்பு இலங்கை அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. மூன்றாவதாக, சில ஏகாதிபத்திய சக்திகள் இலங்கை அரசை பலமுள்ளதாக்கி வருவதோடு அதே நேரத்தில் விடுதலை இயக்கங்களிடையேயும் தம் செல்வாக்கை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

கேள்வி:- ஈழத்தை வென்றெடுக்கும் அரசியல் ரீதியான போராட்டம் தொடர்ந்து நடைபெறும் சாத்தியம் இன்றுள்ள நிலையில் உள்ளதா?

பதில்:- நாங்கள் நீதியின் அடிப்படையிலே எங்கள் போராட்டம் நடைபெறுகிறதென்பதை உண்மையாகவே நம்புகிறோம். தற்காலிக இடறுபாடுகள் எங்களின் குறிக்கோளை அடையும் போராட்டத்தைப் பின் தள்ளிச் செய்யாது. எங்களது போராட்டம் ஒரு மக்கள் போராட்டம்; மக்கள் எம் பக்கமிருக்கிறார்கள்.

கேள்வி:- தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியினருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகள் என்ன? இனப் பிரச்சனையைத் தீர்க்கும் முயற்சியில் ஜே ஆர் நேர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மையாகவே ஈடுபட்டுள்ளாரா?

பதில் :- அரசாங்கத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் மூலம் ஒன்றுமே வெளிவரப்போவதில்லை. அடிப்படைக் கேள்வி என்னவெனில் தமிழர் விடுதலைக் கூட்டணியினால் தேசியரீதியாக ஒரு இயக்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்ய முடியுமா என்பதே. வர்க்கரீதியான அல்லது குறிப்பிட்ட சில சக்திகளைப் பிரதிநிதித்துவம் செய்வதே த.வி.கூட்டணி என்பதே அடிப்படை உண்மை. மக்களின் ஆதரவை இழந்துவிட்ட ஒரு மாஜிப் பாராளுமன்றக் கட்சி ; ஒன்றுக்கும் மக்களாதரவை இழந்து வரும் ஆட்சியிலுள்ள கட்சி ஒன்றுக்கும் நடைபெறும் பேச்சுவார்த்தை என்றே இதைக் குறிப்பிடலாம்.

கேள்வி :- ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் அரசியல் கொள்கை என்ன? தமிழ்ப் போராளிகளில் தேசியவாதிகள் எனவும் சோசலிசவாதிகள் . எனவும் பிரிவுகளுள்ளனவா?

பதில் :- அரச பயங்கரவாதத்துக்கு எதிரானது எனவும் பிரிவினை கோரும் இயக்கமெனவும் எம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி பற்றியதொரு அபிப்பிராயம் நிலவி வருகிறது. ஈழமக்கள் விடுதலை முன்னணி இவ்வபிப்பிராயங்களை நிராகரிக்கிறது. நாங்கள் ஒரு தனித் தேசிய இனம் என்பதால் ஈழம் எங்கள் பிறப்புரிமை.என்று நாங்கள் ஈழக் கோரிக்கையினை முன்வைக்கவில்லை. நாங்கள் ஈழம் கோரி நிற்பது எங்களை ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனம் என்று கருதுவதாலும் எந்தவொரு ஒடுக்கப்பட்ட தேசிய இனத்துக்கும் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட முடியாதது என்று எண்ணுவதாலேயுமாகும். ஆகவே எங்களுடையது ஒரு சுதந்திர விடுதலைப் போராட்டம். தேசியரீதியான ஒடுக்குமுறை இல்லாதொழியுமாயின் எமது பிரிவினைக் கோரிக்கையும் வலுவற்றுப் போகும். நிலைமை என்னவெனில் எந்த ஒரு நாட்டிற்குள்ளும் இனப்பிரச்சனையைத் தீர்க்கும் சக்தியற்று உள்ளது இலங்கை அரசாங்கம். உண்மையான சமாதானத்தை நாடி நாம் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டிய கட்டுப்பாட்டில் உள்ளோம். உண்மையான சமாதானம் பிறக்குமென்பது இலங்கையில் முழுமையான அடிப்படை மாற்றங்கள் நடைபெற்றாலன்றிச் சாத்தியமில்லை. சிங்கள நாட்டிலும் ஈழத்திலும் இம்மாற்றங்கள் நடைபெறுகவேண்டும். மேலும் இவை விடுதலைப் போராட்டங்கள் நடைபெறும்போது நடைபெறவேண்டும். எங்கள் விடுதலைக்கான கோட்பாடுகள் சிங்கள முற்போக்குச் சக்திகளை உள்ளடக்கியே வகுக்கப்பட்டுள்ளன எனினும் இம் முற்போக்குச் சக்திகளை இன்றுள்ள சூழ்நிலையில் ஒன்றிணைத்து மேற்குறிப்பிட்ட மாற்றங்களை சிங்கள மக்களிடையே ஏற்படுத்துவது சாத்தியமற்றதாகவே உள்ளது. ஆனாலும் தொடர்ந்து இம் முற்போக்குச் சக்திகளுடன் உறவைப் பேணுவதிலும் மேலும் வளர்ப்பதிலும் நாம்முனைப்புடன் உள்ளோம். பிற இயக்கங்களினின்றும் இக் கொள்கையும் இது சம்பந்தமான நடவடிக்கைகளும் எம்மை வேறுபடுத்துகின்றது.



கேள்வி :- இந்தியாவின் முயற்சிகள் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் எந்தளவுக்குப் பங்களிப்பை நல்கியுள்ளன? விடுதலை இயக்கங்களின் மீது ஜே.ஆர் ஜெயவர்த்தன வகுத்த திட்டங்களை ஏற்கும்படி இந்தியா அழுத்தம் பிரயோசிக்கின்றதா?

பதில் :- எங்களை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பலப்படுத்த இந்தியா நினைத்ததில்லை. இந்தியா இனப்பிரச்சனை தீர எடுக்கும் ஒவ்வோர் முயற்சிக்கும் ஆதரவு வழங்கிட நாங்கள் முன்வந்தே உள்ளோம். அதே வேளையில் இலங்கை அரசின் வெகுசனப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தும் எங்கள் கட்டுப்பாட்டைத் தட்டிக் கழிக்கவும் எங்களால் முடியாது.

கேள்வி :- சீக்கியரின் காலிஸ்தான் கோரும் போராட்டத்துக்கும் ஈழப் போராட்டத்துக்கும் உள்ள ஒற்றுமைகளைப் பற்றி பரவலாகப் பேசப்படுகின்றது. சில சக்திகள் பகிரங்கமாகவே காலிஸ்தான் போராளிகளைக் கொண்ட தனிப்பட்ட இராணுவத்தைத் திரட்டி ஈழத்தை விடுவிப்பதில் ஈடுபடுத்த வேண்டும்.என்று திட்டங்கள் வகுத்து வருகின்றனவே. இது உங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு எந்தளவுக்குப் பயன்படும்.

பதில் :- அமெரிக்காவில் மிக அண்மைக்காலத்தில் நடைபெற்ற ஒரு மாநாட்டின் போது டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி காலிஸ்தான் இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் உலக சீக்கிய பெடரேசனைச் சேர்ந்தஅதன் தலைவரான திரு புல்லார்.என்பவர் அவ்வியக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தியும் ஈழத்திலிருந்து குடியேறி அமெரிக்காவில் வாழும் எம்மவரான தமிழர் நடத்திய கூட்டரங்கின்போது திரு.புல்லார் தமது ஆதரவை ஈழப்போராட்டத்திற்குத் தெரிவித்திருந்தார். அதே மாதிரியான கருத்தினையே டாக்டர் சுப்பிரமணிய சுவாமியும் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நாம் இது சம்பந்தமாக விடுத்த அறிக்கை ஒன்றில் சமாதானத்தை நாடும் பல்வேறு உலக இயக்கங்களை நாம் ஆதரவு வேண்டி நிற்கும் அதே சமயம் தத்தம் குறிக்கோள்களையும் ஆதிக்கத்தையும் எம் மீது செலுத்தக் காத்திருக்கும் பல்வேறு சக்திகள் குறித்து நாம் விழிப்புடனிருக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் கூறியுள்ளோம். காலிஸ்தான் போராட்டத்தையும் எங்களின் போராட்டத்தையும் பற்றி நோக்கினால் அவையிரண்டும் ஒப்பிடமுடியாதவை. ஏனெனில் அவைபற்றிய சூழ்நிலைகளும் பின்னணியும் வெவ்வேறானவை, எங்கள் போராட்டம் வெறுமனே ஒரு பிரிவினைப் போராட்டமல்ல. அது ஒரு விடுதலைப் போராட்டம். இரண்டாவதாக நாங்கள் ஒரு ஒடுக்கப்பட்ட தனி இனமெனக் கருதுகிறோம். இந்நிலைமை காலிஸ்தான்வாதிகளுடன் ஒப்பிடக்கூடியதொன்றல்லவாயினும் சில சீக்கிய மக்கள் தங்களை மற்ற இந்தியரோடு ஒப்பிட்டுத் தங்களுக்கெனத் தனிப்பட்ட பிரச்சனைகள் இருக்கின்றதென்று கூறிக்கொண்டும் உள்ளார்கள்தான். எனினும் இவை எங்களின் மீது பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகள் இனரீதியான பாகுபாடுகள் என்பவற்றோடு ஒப்பிடுகையில் பரிமாணத்தில் குறைவே. இந்திய உபகண்டம் ஒன்றே என்ற நிலைப்பாட்டுடன் தான் நாம் எமது போராட்டத்தைக் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றபடியால் எமது நிலைப்பாடு மேலும் விளங்குகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்கும் நோக்குடன் பல்வேறு பிரிவினைச் சக்திகளுக்கு ஆதரவு அளிப்பவர்கள் யாவர்? இவர்களே இலங்கை அரசாங்கத்தைப் பலப்படுத்தி வருகின்றவர்கள். அத்தோடு இந்தியாவைக் கூறு போட எண்ணுபவர்கள். இந்தியாவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு வெளிநாட்டுக் கொள்கைகளுக்கு எதிரானவர்கள் — ஏனென்றால் இவர்களுக்கு இந்தியாவின் இக் கொள்கைகள் எரிச்சலூட்டுகின்றனவல்லவா? இவர்கள் இந்தியாவைச் சர்வதேச அரங்கில் கழுத்தறுப்புச்செய்ய எந்நாளும் முயற்சி செய்தே வந்துள்ளார்கள். இவர்களுக்குத் துணை போக நம்மால் ஒருபோதும் முடியாது.

தோழர்களே!

இன்றைய அடக்குமுறைகளுக்கும், அராஜகத்துக்கும் எதிராக மட்டுமல்ல நாளைய எமது மக்களின் சுதந்திரத்துக்கும்... சுபீட்சத்துக்குமாகப் போராடும் ஈ.ழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கரங்களைப் பலப்படுத்துங்கள். அன்பார்ந்த மக்களே! இன்று எமக்கு ஏற்பட்டிருக்கும் நிதியின் தாக்கத்தை தீர்ப்பதற்கு நாம் உங்களையே நாடுகிறோம். இக்கட்டான இன்றைய சூழ்நிலையில், நமது விடியலுக்காகப் போராடும் ஈ.ழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு உங்களால் இயன்ற உதவியினை வழங்குமாறு வேண்டுகிறோம். தொடர்புகட்கு...

EPRLF (FRANCE)
10, RUE DES MARTYRS.
75009 - PARIS.

தொலைபேசி 48748830.



# கல்தோன்றி மண்தோன்று......


கீதைக்கு விளக்கம்
கேட்டீரோ!
வானொலியிலும் தொலைபேசியிலும்
பெரியம்மாவின் மகனை
சித்தியின் மகன் கொல்லத் தேடுகின்றான்
உத்தரவு வந்ததாம்.

காற்று இல்லை.
ஒளியில்லை.
புறக்கூண்டு வாழ்வுக்காறர்
எங்களுக்கு இப்போ
எந்த நம்பிக்கையும் இல்லை.

கடத்திச் செல்வது, கழுத்தை முறிப்பது
காணாமல் போகப் பண்ணுவது,
கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்துப் புகழ்
காட்டு மிராண்டித்தனம்.
தூ!
கோயில்கள்...... கல்லூரிகள்......
கல்விமான்கள்
நாகரீகம் வளர்ந்ததாம் நாகரீகம்.

மன்னவனும் நீயோ
வளநாடும் உனதோ
இன்னொரு கம்பன், அங்கே
நாடு விட்டுச் செல்ல வேண்டுமாம்
கேட்டீரோ!

துப்பாக்கிகளின் பெயரைச் சொல்வதே
பெரிய கௌரவமாய்ப் போன தேசத்தில்
மானிடத்தை யார் மதித்தார்
காற்று இல்லை
ஒளியில்லை
புறக்கூண்டு வாழ்க்கைக்காறர்
எங்களுக்கு இப்போ
எந்த நம்பிக்கையும் இல்லை.



— செல்வம் —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




வெளியீடு: ஈழ ஐக்கியப் பேரவை (பிரான்சு)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்